"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

தை - மாசி - பங்குனி 2010



துயர் துடைப்போம், பணிசெய்வோம்!

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்


Veena's @ barkingside
Indian Shopping made easy
English & Tropical food
NEWLY OPENED
Wide range of products
Many more offers in store
Fresh Vegetables
Frozen foods
Wide range of Asian Foods
Veena's
77-79, High Street, Barkingside, Essex IG6 2AF
Tel: 0208 550 2700
www.veenas.com

மணி 18

# கலசம்
# KALASAM

ஒலி 65

www.smsuk.info
E-mail: kalasam @ gmail.com

## துயர் துடைப்போம், பணிசெய்வோம்!

உலகின் பல நாடுகளிலும் போர், அடக்குமுறை, அராஜகம் வன்முறைகள் என்பன தலைவிரித்து ஆடுகின்றன. இதனால் எண்ணற்ற மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; பாதிக்கப்படுகிறார்கள்; பாதிக்கப்படுவார்கள். கொலை, வன்முறை, பசி, இருக்க இடம் இன்மை என்பன இவர்கள் மீது தினமும் சுமத்தப்படும் கொடுமைகள். **பலம் குறைந்த முதியவர்கள், இளம் சிறுவர்கள், பெண்கள், பணம் அற்ற ஏழைகள் என்போரே இவ்வன்முறைகளால் நேரடியாகப் பாதிக்கப்படுபவர்கள்.** நம் நெருங்கிய உறவினரான இலங்கைத் தமிழர்களும் இதற்கு விதி விலக்கல்ல. கடந்த பல ஆண்டுகளாக, குறிப்பாக, கடந்த முப்பது ஆண்டுகளாக அவர்கள் பட்ட துன்பம் சொல்லிலோ அன்றி எழுத்திலோ அடங்காது. எண்ணற்ற அவலங்களை அவர்கள் அநுபவித்துவிட்டார்கள்; இன்னும் அநுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்த அவலங்களிலிருந்து தப்பி வெளிநாடுகளுக்கு வந்துவிட்ட சிலர், தம் வாழ்வு நன்றாக அமைந்தவுடன் அங்கு உள்ளவர்களை மறந்துவிட்டார்கள். வேறு சிலர், மனித அவலங்களையே பணமாக்கும் முயற்சியில் ஈடுபட்டு தம் வாழ்வை மேம்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். இந்த இரு சாரார்க்கு இடையில் **பொதுநல நோக்கோடு தொண்டு செய்பவர்களும் பலர் இருக்கின்றார்கள் என்பது மனதுக்கு நிம்மதி தருகிறது.** இவர்களுக்கு நம்மாலான உதவிகளை நாம் செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

மேற்கு நாடுகளிலே இருக்கும் நாம் அனைவரும் ஓரளவு வசதியுடன் இருக்கிறோம். நம்முடைய பிள்ளைகள் நல்ல பள்ளிக்கூடங்களில் நல்ல படிப்பு படிக்க வசதி உள்ளது. ஆனால் நமது தாய்நாட்டில் நிலைமை அதுவல்ல. எனவே அங்குள்ள **பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்மால் முடிந்த உதவிகளைச் செய்யவேண்டியது நம் அனைவரதும் கடமையும் பொறுப்பும் ஆகிறது.** வேற்று மதத்தவர் செய்யும் அளவுக்கு சைவர்கள் மனிதாபிமான சேவைகளைச் செய்வதில்லை என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. அது முற்றிலும் உண்மையல்ல. பலன் எதிர்பார்த்துச் செய்வது சேவையல்ல. **சைவமும் தமிழும் ஈதல், இசைபட வாழ்தல் பற்றியே எப்பொழுதும் பேசுகின்றன.**

அந்த முயற்சியில் சைவ முன்னேற்றச் சங்கமும் கல்முனையில் நால்வர் கோட்டம் என்ற அமைப்பை உருவாக்கி 30 பிள்ளைகள் இருக்க, படிக்க வசதிசெய்து கொடுத்திருக்கிறது. ஆனால் அங்கு இன்னும் பல வேலைகள் செய்யவேண்டியுள்ளது. அதற்கு மேலும் பணம் தேவை. கலசம் வாசகர்களாகிய நீங்கள் இப்பணிக்கு உங்களாலான பொருளுதவி புரிந்தால் உங்கள் மனமும் அங்குள்ள பிள்ளைகளின் தேவைகளும் நிரம்பும். செய்வோமா?

**நிர்வாகக் குழு:** திரு. க. ஜெகதீசுவரன் (ஆசிரியர்) திரு. ச. ஆனந்ததியாகர், திரு. சி. தம்பு
திரு. சி. அற்புதானந்தன் திரு. வ. இ. இராமநாதன் திரு. சு. வைத்தியநாதன்

**தொடர்பு முகவரி:** SMS 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732

# இந்த இதழில்


| | |
|---|---|
| யார் விட்ட பிழை - கந்தபுராணச் சிந்தனைகள் | 03 |
| அருணகிரிநாரின் உவமைகள் - சென்ற இதழ் தொடர்ச்சி | 06 |
| திருமூலர் நாயனார் - பெரியபுராணத்தொடர் | 09 |
| திருமறைக்காடும் திருவாய்மூரும் அற்புதங்களும் | 11 |
| சந்தான குரவர்கள் | 14 |
| இசை உலக இளவரசர் | 18 |
| சி. வைத்தியலிங்கம் - சிறுகதை எழுத்தாளர் | 22 |
| படித்தவர் பகன்றவை | 27 |
| மனித வாழ்வில் ஜோதிடம்... | 30 |
| ஹரித்துவார் - பயணக்கட்டுரை | 33 |
| கண்ணனும் தாத்தாவும் | 36 |
| திருக்குறள் | 40 |
| Hinduism in search of Answers | 42 |
| Thiruvalluvar - picture story | 45 |

# யார் விட்ட பிழை?

**கந்தபுராணச் சிந்தனைகள்**
**சிந்திப்பவர்: Dr. சங்கரப்பிள்ளை சிவலோகநாதன்**

ஒரு குழந்தை வளரும் நாள்களின் சூழ்நிலை அது வளர்ந்து வாழும் நாள்களில் அதன் நடத்தைக்கு வித்தாகிறது எனக் கண்டுள்ளார்கள். இதனாலே வளரும் நாள்களில் குழந்தையை வழிநடத்துவது மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. சூரன் ஒரு மிகவும் நல்ல குழந்தையாகவே பிறந்திருக்க வேண்டும். அவன் தம்பியரை அழைத்துக்கொண்டு பெற்றோரிடம் புத்திமதிகேட்டு, அதன் படியே வாழ்க்கையை அமைத்து ஒழுகியிருக்கிறான். அவனுக்கு வழிகாட்டியவர்கள் காசிபர், மாயை, சுக்கிராசாரியார் என்ற மூவருமே. நைந்த அசுர குலத்திலே பிறந்த போதும் அவன் புத்திமதி கேட்டான். பெரிய பலம் பெற்றவுடனும் புத்திமதி கேட்டான். இந்தப் புத்திமதிகளே அவனைக் கைவிட்டிருக்க வேண்டும். வாழ்க்கையிலே உருவாகும் நாள்கள், வாழும் நாள்கள் என்ற இரண்டுமே முக்கியமானவை. வழமையாக உருவாகும் நாள்களிலே கல்வி, செயல்திறன் இரண்டையும் ஆசிரியர்களிடமும் பெற்றோரிடமும் பிள்ளைகள் கற்றுக் கொள்வார்கள். இதற்கான கல்விக்கூடங்கள் பல இருக்கின்றன. ஆனால் அவர்கள் வலிமைபெற்று கல்வி, செல்வம், செயல்திறன் எல்லாம் பெற்றவுடன் அவற்றைக் கொண்டு நல்வாழ்க்கை வாழ்வதற்கான கல்விக்கு முறையான கல்விக்கூடங்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த இடத்தில் விழுபவர்கள் தான் பலர். அழிவை நெருங்கி நிற்கும்போது, பெற்ற தாய்கூட நீ செய்வது பிழை என்று சொல்வாளேயொழிய, அதற்குத் தானும் பொறுப்பு என்பதை ஒத்துக்கொள்வதில்லை. இந்தப் பெரிய பொறுப்பு - கல்வி கற்றோ, செல்வம் பெற்றோ முன்னே றியவர்கள் குற்றம் அற்றவர்களாக இருக்க வேண்டிய பொறுப்பு - ஒவ்வொரு தனிப்பட்ட வரையுமே சார்ந்து நிற்கின்றது என்பதைக் கந்தபுராணம் சொல்லா நிற்கின்றது. மாயையின் புத்திமதிப்படி வேள்வி செய்து பல வரங்களைப் பெற்று, தேவரை வென்ற சூரன், தனியனாய் யுத்தகளத்தில் நிற்கும் போது மாயை "உன்னுடைய படைகள் முழுதும் இறக்க, தனியனாகியும் தேவரைச் சிறை விடுவதைப்பற்றி நினைத்தாயில்லை. இன்னும் முருகனோடு அமர் செய்ய நினைத்தாயாயின் அழிவாய்" என்று சொல்கின்றாள்.

உறுபடை சுற்றந் துஞ்ச ஒருவனே யாயும் விண்ணோர்
சிறைவிடுத் துய்யு மாறு சிந்தனை செய்தி லாய்நீ
அறுமுகன் தன்னோ டின்னும் அமர்செயக் குறித்தி யாயின்
நிறைபெருஞ் செல்வ வாழ்க்கை நீங்கினை போலு மன்றே.

சூரபன்மன் வதைப் படலம் 294

மாயையின் ஏவுதலால் தேவர்களைப் பகைவராகக் கருதியதையும், தேவர்களை ஏவல் கொண்ட தையும் மாயை நினைவூட்டக்கூடவில்லை. இனிச் சூரன் பெற்ற புத்திமதிகளைப் பார்ப்போம்.

முதலாவதாகக் காசிப முனிவருடைய உபதேசம். "மைந்தர்களே அறத்தைச் செய்யுங்கள். தீமையை நீக்குங்கள். சிவபெருமானை நினைத்துச் சிறந்த தவத்தை செய்யுங்கள். அதுவன்றிச் செய்யதக்க வேறு செயல் யாது உள்ளது."

ஆதலின் மைந்தர்காள் அறத்தை ஆற்றுதிர்
தீதினை விலக்குதிர் சிவனை உன்னியே
மாதவம் புரிகுதிர் மற்ற தன்றியே
ஏதுள தொருசெயல் இயற்றத் தக்கதே.

காசிபனுபதேசப் படலம் 24

இந்த உபதேசத்தைத் தாயாகிய மாயை தட்டி விடுகிறாள். அடுத்ததாக மாயையின் உபதேசம் "பிள்ளைகளே கல்வி, செல்வம், என்ற இரண்டிலே ஒன்றை அடைந்துதான் முன்னேற முடியும். இதில் செல்வமே சிறந்தது. அந்தச் செல்வம் பல வகைகளையுடையது. அவற்றை எல்லோரும் பெறமாட்டார். முறையாக அவற்றை எல்லாம் பெறும் பொருட்டு நீங்கள் சிந்திப்பீர்களாக. அதுவே நல்ல தீர்மானம். இதையன்றி உய்வதற்கு வேறு வழியில்லை."

அவ்வளம் பலவகைத் தாகும் ஆங்கவை
எவ்வரும் பெறுகிலர் இயல்பின் யாவையுஞ்
செல்விதின் நீர்பெறச் சிந்தை செய்யுமின்
உய்வது வேறிலை உறுதி யீதலால்.

மாயை உபதேசப் படலம் 14

இவ்வாறாக மாயை சொல்ல, அவளின் உபதேசப்படி சிவனை நினைத்து பெருவேள்வி செய்து பல அரிய வரங்களைப் பெறுகிறான் சூரன். வாழுங்காலம் தொடங்குகிறது. சரியான முறைப்படி புத்திகேட்டு தந்தையிடம் போகிறான். தந்தையைப் பணிந்து தான் பெற்ற வரங்களையெல்லாம் சொல்லி இனி நாங்கள் செய்யக்கூடியது யாது என்று கேட்கிறான். தந்தையான காசிபர், அதைக்கேட்டு "இந்திரனின் வாழ்வுக்கு முடிவு வந்ததோ? தேவர்களுக்கெல்லாம் முடிவு வந்ததோ? எம் வேத ஒழுக்கம் மாறியதோ? எம் சிவபெருமானின் அருள் இப்படியோ" என்று நினைத்தார். சூரனைச் சுக்கிராசாரியாரிடம் அனுப்பினார். தன்னுடைய பொறுப்பை ஏற்கவில்லை.

சுக்கிராசாரியார் அவனுக்குப் பல துர்ப்போதனைகள் செய்தார். தேவர்களை ஏவலராகக் கொள் என்று பலவற்றையும் சொல்லி எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல் "கொலை, களவு, காமம், நினைத்துச் செய்யும் சூது ஆகிய இவற்றால் உனக்கும் பின்வரும் தீங்குயாதும் இல்லை. இவற்றை செய்யாவிட்டால் நீ விரும்பிய பொருள்கள் எல்லாம் இவ்வுலகிலே ஒருங்கே கிடைக்காது. நீ அஞ்ச வேண்டியவர்கள் எவருமில்லை" என்றும் சொல்கிறார்.

கொலையொடு களவு காமங் குறித்திடும் வஞ்ச மெல்லாம்
நினையெனப் புரிதி யற்றால் நினக்குமேல் வருந்தீ தொன்றும்
இலையவை செய்தி டாயேல் இறைவநீ விரும்பிற் றெல்லாம்
உலகிடை ஒருங்கு நண்ணா உனக்கெவர் வெருவும் நீரார்.

சுக்கிரனுபதேசப் படலம் 50

பெற்றோர் விட்ட இடைவெளியைச் சுக்கிராசாரியார் நிரப்பிவிடச் சூரன் பிழையான அத்திவாரத்தோடு தன்னுடைய வாழ்வைத் தொடங்கிக் கொடூரமான காரியங்களைச் செய்கின்றான். சூரனுடைய கொடுமைகளை

பாரினை யலைத்துப் பல்லுயிர் தமக்கும்
பருவரல் செய்துவிண் ணவர்தம்
ஊரினை முருக்கித் தீமையே இயற்றி
உலப்புறா வன்மை கொண்டுற்ற...

விடைபெறு படலம் 35

என்று சிவபெருமான் முருகப் பெருமானுக்குக் கூறுவதாகக் கந்தபுராணம் சொல்கிறது.

இவ்வாறு சூரன் பிழையானவனாக மாறியதற்குக் காரணம் யார்? இது தந்தையின் பிழையா? தாயின் பிழையா?அல்லது ஆசிரியரின் பிழையா? இதை ஆராய்ந்தால் தந்தை தன் பொறுப்பை எடுக்காது இருந்த குற்றத்திற்கு ஆளாகின்றான். குழந்தையைச் "சான்றோனாக்குதல் தந்தையின் கடனே". என்று சங்க இலக்கியம் சொல்லும். தாய் பலம் வாய்ந்த ஒருவனை உருவாக்கும் போது அதற்குத் தேவையான கட்டுப்பாட்டையும் உயர் நெறிகளையும் ஒருங்கு சேர உருவாக்காத குற்றத்திற்கு ஆளாகிறாள். ஒரு அதிசக்தி வாய்ந்த மோட்டார் வாகனத்திற்கு அதன் "எஞ்சின்" எவ்வளவு முக்கியமோ, அதேயளவு முக்கியம் அதன் "பிறேக்" இற்கும் உண்டு. ஆசிரியராகிய சுக்கிராசாரியார், கொள்கை மேன்மையைக் கற்பிக்காத பாரிய குற்றத்திற்கு ஆளாகிறார். இதனாலேதான் நல்லாசிரியரின் இலக்கணத்தைக் கூறப்புகுந்த நன்னூல் பின்வருமாறு சொல்கின்றது.

குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலை பயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலன் மலை நிறை கோல் மலர்நிகர் மாட்சியம்
உலகியல் அறிவோ டுயர்குணம் இவையும்
அமைபவன் நூல்உரை ஆசிரி யன்னே.

நன்னூல் 26.

"நல்ல குடிப்பிறப்பும், அருளும், இறைவழிபாடும் உயர்ந்த இலட்சியம் ஆகிய இவற்றாலும், பிறவற்றாலும் வந்த மேன்மையும் பல நூல்களில் தேர்ந்த கல்வித் தேர்ச்சியும் மாணாக்கர்களுக்குக் கற்பிக்கக்கூடிய சொல் வன்மையும் நிலம், மலை, துலாக்கோல், மலர் என்பவற்றில் பொருந்திய சிறந்த குணங்களும், உலகியலில் நல்ல தேர்ச்சியும், இவற்றை ஒத்த உணர்ந்த குணங்கள் பிறவும் அமைந்துள்ளவன் நூலைக் கற்பிக்கும் ஆசிரியன் ஆவான் என்பது இதன் பொருள்.

இவ்வாறாக தந்தை தாய் ஆசிரியர் ஆகிய மூவரும் பிழைவிட்டால் எவ்வாறு பேரழிவு வந்து சேரும் என்பதைச் சூரனின் வாழ்வின் மூலம் கந்தபுராணம் சொல்லா நிற்கின்றது.

## பரிசலில் பவனிவரும் நடராஜர்

மார்கழி மாதத்தில் திருவாதிரைத் திருநாளில் ஸ்ரீநடராஜப் பெருமான் திருவீதியுலா செல்வது யாவரும் அறிந்ததே. ஆனால் பரிசலில் பவனி வருவது எங்கே தெரியுமா?

ஈரோடு அருகிலுள்ள காங்களம்பாளையத்தில் நடராஜர் பரிசலில் பவனிவரும் காட்சியை திருவாதிரைத் திருநாளிற் பார்க்கலாம். காவிரியின் நடுவே தானாகத் தோன்றிய பாறைமீது சிவனார் எழுந்தருளியுள்ளார். நட்டாற்றீஸ்வரர் என்ற பெயர் இதனாலேயே வந்தது. அகத்தியருக்கு சிவன் காட்சிதந்த தலம் இது. இக் கோயிலில் திருவாதிரை நாளில் ஸ்ரீ நடராஜப்பெருமானும் ஸ்ரீ சிவகாமசுந்தரியும் பரிசலில் எழுந்தருள்வர், இன்னொரு பரிசலில் மேள—தாளங்கள் இசைக்க ஆற்றிலேயே கோயிலைச் சுற்றி வலம் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சி!

நன்றி:— தகவல்: சக்தி (விகடன்)

# அருணகிரிநாதரின் உவமைகள்

- E.R. பாலாஜி

*சென்ற இதழ்த் தொடர்ச்சி.......*

இன்னொரு பாட்டில் இதே கருத்தை இன்னும் விவரமாகக் கூறுகிறார்.

தோலால் சுவர்வைத்து நாலாறு காலில் சுமத்திஇரு
காலால் எழும்பி,வளை முதுகோட்டி கைந்நாற்றி நரம்
பாலார்க்கை யிட்டு தசைகொண்டு மேய்ந்த அகம் பிரிந்தால்

இந்த வீட்டுச் சுவர் என்னவென்றால் அது நம்தோல். நாலாறு கால் என்பது பத்து வகையான வாயுக்கள். இரண்டு கால்களாகிய தூண்களில் நிறுத்தி கைகளைத் தொங்க வைத்து, வளையும்படியான முதுகு ஒன்றைப் பொருத்தி நரம்பு என்னும் கயிற்றால் கட்டி, தசை என்ற காரையால் பூசப்பட்ட வீடுதான் இந்த உடல்.,

அருணகிரியாரின் நூல்களில் திருவகுப்புகள் மிகவும் அழகு வாய்ந்தவை. அதிலும் முதல் செய்யுளே மனத்தைக் கவரும் உவமையுடன் ஆரம்பிக்கிறது. அதில் வரும் சந்தமானது,

தனத்ததன தனத்ததன தனத்ததன
தனத்ததன தனத்ததன தனத்ததன
தனத்த தன தான

பருத்தமுலை சிறுத்த இடை வெளுத்தநகை
கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி
விழிக்கு நிகர் ஆகும்.

இந்த வேலானது எப்படி இருக்கிறது என்றால் ஒரு வீரச்சிறுமியின் விழியளவு கூர்மையாக இருக்கிறதாம். அந்த மறச்சிறுமி எப்படி இருக்கிறாள் என்றால், பருத்த முலை - பெரிய மார்பகம், சிறுத்தஇடை - மிகச்சிறிய இடை. வெளுத்த நகை - அவள் சிரிப்பு வெண்மையாக இருக்கிறது (பற்களின் பிரகாசத்தினால்). கறுத்த குழல் - கூந்தல் கருமையோடு கூடியது, சிவத்த இதழ் - உதடுகள் சிவந்தவை. ஆனால் இந்த அடைமொழிகள் யாவும் மறச்சிறுமிக்கும் பொருந்தும், வேலுக்கும் பொருந்தும்.... வேலின் நுனி கூர்மை ஆனால் வேலுக்கு மார்பு பரந்து உள்ளது. சிறுத்த இடை. வேலின் தண்டு சிறுத்தது. வெளுத்தநகை சிறுமிக்கு வெள்ளைச்சிரிப்பு - வேலுக்கு வெள்ளியால் பூண். கறுத்தகுழல் சிறுமிக்கு கருத்த கூந்தல் வேலுக்கு கறுப்புக் குழாய். சிவத்த இதழ் - சிறுமிக்குச் சிவந்த உதடுகள், பகைவர்களின் குருதி படிந்து வேலின் ஓரம் சிவப்பு.

சாதாரணமாக மற்றப் புலவர்கள் பெண்களின் விழிகளை, கூர்மையில் வாள் அல்லது வேலுக்கு ஒப்பிடுவார்கள். அதாவது உவமேயம் விழி, உவமானம் வேல். ஒரு பழைய திரைப்படப்பாடல் நினைவுக்கு வருகின்றது. கதாநாயகன் பெரிய வாளைப் பிடித்திருப்பான். கதாநாயகியின் கண்களைப் பார்த்துப் பாடத் தொடங்குவான். “உன் விழியும் என் வாளும் சந்தித்தால்”. நீண்ட நேரம் பாடிவிட்டு, கடைசியில் வாளை விட விழியே கூர்மையானது என்ற முடிவுக்கு அவன் வருகிறான். ஏனென்றால் அவனது வாள் ஏற்படுத்துவது காயம். அவள் விழிகள் உண்டாக்குவது மாயம். விழிகள் உண்டாக்கிய அந்த மாயத்திற்கு முன்னால் வாள் உண்டாக்கிய காயம் ஒன்றுமேயில்லை என்கிறான்.

அருணகிரியார் ஒரு படி மேலேயே போய்விட்டார். மங்கை விழியை வேலோடு ஒப்பிடாமல், வேலை மங்கை விழியோடு ஒப்பிடுகிறார். அதாவது உவமேயம் முருகனின் வேல், உவமானம்

மறச்சிறுமி. இந்த இடத்திலே, உவமையில் தான் ஒரு முடிசூடா மன்னர் என்பதை உணர்த்தி விடுகிறார் அருணகிரியார்.

அடுத்த உவமையை நாம் பார்ப்பது அவர் எழுதிய சீர்பாத வகுப்பிலாகும். அதன் சந்தம்

தன தனன தன தனன தன தனன தன தனன
தன தனன தன தனனன தனதான தான தன

உததி இடை கடவும்மர கதவருண குலதுரக
உபலளித கனகரத சதகோடி சூரியர்கள்
உதயம் என அதிகவித கலபகக மயிலின் மிசை
யுகம் முடிவின் இருள் அகல ஒருசோதி வீசுவதும்

யுகங்களின் முடிவில் முருகப்பிரான் மயில்வாகனத்தில் அமர்ந்து காட்சி தருவது எப்படி ஒளி வீசுகிறது என்பதை உவமையுடன் விளக்குகிறார் அருணகிரியார். அந்த ஒளி சதகோடி சூரியர்கள் உதயமென அதாவது ஒரே சமயத்தில் நூறுகோடி சூரியர்கள் உதித்தால் எப்படி ஒளி வீசுமோ அப்படி வீசுகிறதாம். அந்த சூரியர்கள் எப்படி என்றால் கனகரத - தங்கத்தேரில் வருகிறார்கள் உததியிடை - பெருங்கடலின் நடுவில் மரகதவருண - பச்சை நிற, குலதுரக - ஜாதிக் குதிரைகள் அதாவது கடல் நடுவே பச்சை நிற ஜாதிக் குதிரைகள் பூட்டி, தங்கத்தேரில் வலம் வரும் சூரியர்கள் ஒரே சமயம் நூறு கோடிப் பேர்களாக வந்தால் எவ்வளவு ஒளிவீசுமோ அவ்வளவு ஒளி முருகப்பெருமானிடமிருந்து வீசுகிறதாம். உததியிடை..... ஒரு சோதி வீசுவதும் இதைச் சொல்லும் போதே ஒரு மயில் தோகை விரித்து ஆனந்த நடமாடுவதைப் போல் ஒலிக்கிறதல்லவா?

அடுத்த உவமைக்கு நாம் செல்வது தேவேந்திர சங்க வகுப்பாகும். இதன் சந்தம்

தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன
தானந்தன தந்தன தானந்தன தந்தன

இதில் முழுக்க முழக்க அருணகிரி சித்தரிப்பது அம்பிகையின் அழகையும் ஆற்றலையும் பற்றி... ஆரம்பிப்பது

தரணியில் அரணிய முரண்இர ணியன்உடல்
தளைநக துதிகொடு
சாடுஓங்கி நெடுங்கிரி ஓடேந்து பயங்கரி

சற்று கொடூரமான காட்சி தான்

இரண கிரண மடமயில் மிருக மத புள
கித இளமுலை இள
நீர் தாங்கி நுடங்கிய நூல் போன்ற மருங்கினாள்

இடையானது நூல்போல் மெலிந்து காணப்படுகிறதாம். அந்த நூல் நுடங்கியதாம். சற்றே வளைந்து காணப்படுகிறது. ஏனென்றால் அது இளநீரைச் சுமக்கிறதாம். மானிலிருந்து வந்த புனுகினைப் பூசிய இளைய மார்பகமாகிய இளநீரின் சுமையைத் தாங்க முடியாமல் அந்த நூல் போன்ற இடையானது சற்று வளைந்து காணப்படுகிறதாம்.

இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். அருணகிரியாரின் இன்னொரு சிறப்பு அம்சம் என்னவென்றால் வர்ணனை. இயற்கையைச் சிறந்த முறையில் வர்ணித்திருக்கிறார். போர்க்காட்சிகளையும் பிரமிக்கத்தக்க முறையில் வர்ணித்து இருக்கிறார். இன்னொரு முறை இவைபற்றிச் சிந்திக்கலாம்.

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

## விசேட தினங்கள்

## ஜனவரி (14-01-2010) தொடக்கம் ஏப்பிரல் (14-04-2010) வரை

| | | | |
|---|---|---|---|
| 14-01-2010 | வியாழன் | தைப்பொங்கல் | |
| 15-01-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | ஆனாயநாயனார் |
| 22-01-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | மூர்த்திநாயனார் |
| 29-01-2010 | வெள்ளி | தைப்பூசம் | |
| | | பெரியபுராணச் சொற்பொழிவு | முருகநாயநார் |
| 05-02-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | உருத்திரபசுபதி நாயனார் |
| 12-02-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | திருநாளைப்போவார் நாயனார் |
| 19-02-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | திருக்குறிப்புத்தொண்ட நாயனார் |
| 26-02-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | சண்டேசுரநாயனார் |
| 27-02-2010 | சனி | மாசிமகம் (மாசி சதுர்த்தசி) | நடராஜர் அபிஷேகம் |
| 05-03-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | திருநாவுக்கரசுநாயனார் |
| 12-03-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | குலச்சிறைநாயனார் |
| 13-03-2010 | சனி | மகாசிவாராத்திரி | |
| 19-03-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | பெருமிழலைக்குறும்பநாயனார் |
| 26-03-2010 | வெள்ளி | யோகர் சுவாமிகள் குருபூசை | |
| | | பெரியபுராண சொற்பொழிவு | காரைக்கால் அம்மையார் |
| 28-03-2010 | ஞாயிறு | யோகர் சுவாமிகள் குருபூசை | |
| 29-03-2010 | திங்கள் | பங்குனி உத்தரம் | |
| 01-04-2010 | வியாழன் | காரைக்கால் அம்மையார் குருபூசை | |
| 02-04-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | அப்பூதியடிகள் நாயனார் |
| 09-04-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | திருநீலநக்க நாயனார் |
| 14-04-2010 | செவ்வாய் | விகிர்தி வருடப்பிறப்பு | |

**ஸ்ரீ சிவகாமசுந்தரி சுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் சந்நிதி தினமும் மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை சிவனடியார்களுக்காகத் திறந்திருக்கும்.**

**தினமும் மாலை 8மணிக்கு பூசை வழிபாடு நடைபெறும். மேலே குறிப்பிட்ட விசேட தினங்களில் அபிடேக ஆராதனை, கூட்டு வழிபாடு போன்றவையும் நடைபெறும். அன்பர்கள் அனைவரும் சந்நிதிக்கு வந்து வழிபாடுகளிலே கலந்து எல்லாம் வல்ல நடராசப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு சைவ முன்னேற்றச் சங்கம் அடியார்களை அன்புடன் வரவேற்கிறது.**

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

# திருமூலர் நாயனார்

மு சிவராசா

பெரியபுராணத்திற் போற்றப்படும் நாயன்மார்களுட் பெரும்பாலானவர்கள் இன்ன நாட்டில், இன்ன ஊரில், இன்னார் இன்னாருக்கு மகவாய் அவதரித்தனர் என நாம் அறியக்கிடக்கின்றது. ஆனால், திருமூலரைக் குருவழியாக அறிமுகப்படுத்துவது குறிப்பிடத் தக்கது. அவர் அவதரித்த ஊரோ, அவர் பெற்றோர் பற்றிய விவரமோ தெரியவில்லை. திருக்கயிலாய பரம்பரை ஆசாரியர்களுள் நந்தி எனப்படும் சீகண்டருடைய மாணாக்கர் என்றே திருமூலர் குறிக்கப்படுகின்றார்.

சீகண்டருடைய மாணாக்கர் எண்மர். சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர், சிவயோக மாமுனி, பதஞ்சலி, வியாக்கிரமர், திருமூலர் ஆகியோர் அவர்கள். திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருந்து ஆண்டுக்கு ஒரு திருப்பாடல் என்ற முறையில் 3000 திருப்பாடல்களைக் கொண்ட 'திருமந்திரம்' நூலை அருளினார் என்பர். இதில் ஒன்பது மூல ஆகமங்களின் உட்கருத்துக்களையும் முறையே விளக்கும் ஒன்பது தந்திரப் பகுதிகளும், பலவேறு தலைப்புக்களோடு கூடியதாகவும் 3000 திருப்பாடல்கள் உள்ளன. பன்னிரு திரு முறைகளுள், பத்தாம் திருமுறையாக வகுக்கப்பட்ட இது சைவ சித்தாந்த நூல்களுக்கெல்லாம் ஒரு வழிகாட்டி எனலாம்.

சீகண்டருடைய மாணாக்கர் எண்மரும் உலகில் பல மடங்களை நிறுவி, தாம் கற்ற உண்மை களைச் சீடர்களுக்குப் போதித்து ஆன்மாக்களிடையே பரப்பினார்கள். திருமூலருடைய மாணாக்கர்கள் ஏழுபேர். அவர்களும் தனித்தனி மடங்கள் நிறுவி ஆகம உண்மைகளை மக்களுக்குப் போதித்து வந்தனர். இவ்வாசாரியர்களின் பரம்பரையில் ஏற்பட்டவையே தருமபுரம், திருவாவடுதுறை மடங்கள்.

திருமூலர் திருக்கயிலாய மலையிலிருந்து பதஞ்சலி, வியாக்கிரமர் ஆகியோருடன் கூடிச் சிதம்பரம் கனகசபையில் நடராஜரின் ஆனந்தத் தாண்டவத்தை தரிசிப்பதற்கு ஒருமுறை வந்திருந்தார். நடராஜர் திருநடனம் செய்யும் அரங்குகள் ஐந்து. கனகசபை (பொன்னம்பலம்), ரஜதசபை (வெள்ளியம்பலம்), தாமிரசபை, சித்திரசபை, இரத்தினசபை என்பன அவை. கனக சபைத் திருநடனம் தரிசிக்க முத்தி சித்திக்கும் என்பர்.

திருமூலர் சிறந்த சிவயோகியாகத் திகழ்ந்தவர். அணிமா, லகிமா, மகிமா, பிராத்தி, கரிமா, பிராகாமியம் (பரகாயப்ரவேசம்), ஈசத்துவம், வசித்துவம் என்னும் அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றவர். நாயனார் இரண்டாம் முறையாகக் கயிலையை விட்டுப் புறப்பட்டமை பொதிகை மலையிலிருந்த அகத்திய மகாமுனிவருடன் சிலகாலம் தங்கியிருக்கும் எண்ணத்திலாகும். இம்முறை தென்னாட்டுப் பயணத்தின்போது வழியிலுள்ள பல திருத்தலங்களையும் தரிசித்து வந்தார். இவற்றுள், திருக்கேதாரம், நேபாள பசுபதீச்சரம், காசி, அவிமுத்தம், திருப்பருப்பதம், திருக்காளத்தி, திருவாலங்காடு, காஞ்சி ஏகாம்பரம், திருவதிகை, சிதம்பரம், திருவாவடுதுறை என்பன குறிப்பிடத் தக்கவை. காசி, காஞ்சி, சிதம்பரம் ஆகிய தலங்களில் சிற்சில காலம் தங்கியிருந்து இறைவழிபாடு புரிந்தார். அவ்வாறே திருவாவடுதுறையிற் தங்கியிருந்த நாள்களில் உண்டான நிகழ்ச்சி ஒன்று உலகுக்குத் திருமந்திரத்தைத் தந்தது.

திருவாவடுதுறைக்கு அருகிலுள்ள சிற்றூர் சாத்தனூர். அங்கு வசித்த அந்தணர் வீட்டுப் பசுக்களை மேய்ப்பவன் மூலன் என்னும் இடையன். வழமைபோல் ஒருநாள் மூலன் பசுக்களை மேய்ச்சற்தரையில் புல்மேய விட்டு, காவல் செய்துகொண்டிருந்த போதில் விதிவசத்தால் திடீரென இறந்து விழுந்தான். தரையிலே கிடந்த அவனது உடலைச் சூழ்ந்து பசுக்கள் மோந்தும் நக்கியும் கனைத்தும் தம் துயரை வெளிப்படுத்திக்கொண்டிருந்தன. இதனைக் கண்ணுற்ற சிவயோகியார் பசுக்கள்மீது இரக்கம் கொண்டார். மூலன் உயிர்பெற்று எழுந்தால் அன்றி அவற்றின் துன்பம் தீராது என்பதை உணர்ந்தார். தாம் பெற்றிருந்த அட்டமா சித்திகளுள் பரகாயப் பிரவேசம் என்பதன் வழி தமது உயிரை மூலன் உடலில் புகுத்த நாயனார் உளம் கொண்டார். அதன்பொருட்டு தம் உடலை பாதுகாப்பான ஓரிடத்தில் வைத்து மூலன் உடலிற் தம் உயிரைப் புகுத்தி திருமூலராக எழுந்தார். உயிர் பெற்றெழுந்த மூலனைக் கண்ட பசுக்கள் மகிழ்ச்சியோடு புல்மேயப் போயின.

திருமூலர் அவை மேய்ந்தபின் நீர் காட்டி, மாலையில் அவை தத்தம் வீடுகளுக்குப் போகத் துணையாகச் சென்றார். அதன் பின் மூலனுடைய வீட்டுக்குள் நுழையாது புறத்தே நின்ற அவரை மூலன் மனைவி உள்ளே வரும்படி அழைத்தாள். அவர் அவளுக்கும் தமக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாதெனக் கூறி அவ்விடம் விட்டகன்றார். அகன்றவர் அவ்வூரிலுள்ள பொதுமடம் ஒன்றிலே தங்கி, சமாதியில் இருந்தார். தூங்காமல் துயரோடு இரவு முழுவதும் வீட்டில் இருந்த மூலன் மனைவி மறுநாள் காலை ஊர்ப் பெரியவர்களிடம் தன் கணவரின் செய்கை குறித்து முறையிட்டாள். அவர்கள் அவளுடன் கூடவே மடத்துக்குச் சென்று பார்த்தபோது நாயனார் சித்த விகற்பங்கள் நீங்கப்பெற்று சிவயோகத்தில் இருப்பதைக் கண்டனர். அவர் நிலை அறிந்த அவர்கள் மூலன் மனைவிக்குத் தேறுதல் கூறி அழைத்துச் சென்றனர்.

திருமூலர் தமது உடலைத் தேடிச் சென்றபோது அது காணமற்போனமையை அறிந்தார். அவ்வாறு உடல் மறைந்தமை ஈசன் திருவருளே என்பதைத் தமது ஞானதிருஷ்டியினால் உணர்ந்தவராய் திருவாவடுதுறை அடைந்து, ஆலயத்தின் மேற்குப் புறத்தில் நின்றதோர் அரசமரத்தின் கீழே சிவ யோகத்தில் அமர்ந்திருந்தார்.

அவ்வாறு இருந்த நாள்களில் ஆன்மாக்கள் பிறவிப் பிணியின் நீங்கி இறைவனடி சேர்வதற்கான உபதேசங்களை உள்ளடக்கி சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் சைவ நாற்பாதங்களை விளக்கி மூவாயிரம் திருப்பாடல்களைக் கொண்ட “திருமந்திரம்” எனும் சைவசித்தாந்தத் தெள்ளமுதை அளித்தார். திருமூலர் நாயனார் ஐப்பசி மாத அச்சுவினித் திருநாளில் கயிலை மலையில் எழுந்தருளி இருக்கும் கைலாசபதியின் திருவடி நீழலை அடைந்தார்.

அவர் திருவாக்கு:

“நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே”

திருச்சிற்றம்பலம்

# திருமறைக்காடும் திருவாய்மூரும் அற்புதங்களும்.

இடைக்காட்டு சயம்பு- இலண்டன்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் திருநாவுக்கரசு நாயனாரும் திருவீழிமிழலையினின்றும் யாத்திரையைத் தொடர்ந்து திருமறைக்காடு வந்து சேர்ந்தனர்.

"குன்ற வில்லியார் மகிழ்ந்த கோயில் புகுந்து வலங்கொண்டு
சென்று சேர்ந்தார் தென்புகலிக் கோவும் அரசும் திருமுன்பு"

கோயிலைச் சுற்றி வழிபட்டு வந்து மூலமூர்த்தியின் வாயிலுக்குமுன் வந்து நின்றார்கள். கதவு பூட்டியிருந்தது. "இந்தக் கதவு திறக்க முடியாமல் பூட்டப்பட்டேயிருக்கிறது. வலது பக்கச் சுவரிலே செய்யப்பட்ட வாயில் மூலம்தான் சென்று வழிபடுகிறோம்" என்று அர்ச்சகர்கள் நாயன்மாரை அடையாளங்கண்டு விளக்கமாய்ச் சொன்னார்கள். "முன்னொரு காலத்தில் வேதியர்கள் வந்து இறைவரைப் பூசித்துவிட்டு வேதங்களை ஓதியே திருக்கதவை அடைத்துவிட்டுப் போய் விட்டார்கள். திருக்கதவந் திறப்பதற்குரிய மந்திர வலிமையுள்ள பெரியோர் கிட்டவில்லை. அதனால் திருக்கதவம் பூட்டியே கிடக்கிறது. வேதங்களின் அதி தேவதைகள் உருவெடுத்து வந்து பூசை பண்ணிப் போயிருக்கிறார்கள். வேதமோதியே திருக்கதவந் திறந்தார்கள்; பூசை முடிவில், வேதமோதியே பூட்டினார்கள். பின் திறக்கவல்ல வேதியர் கிடைக்கவில்லை." என்றனர் அங்கு இருந்தவர்கள். நாயன்மாரிருவரும் விடயத்தைக் கிரகித்துக் கொண்டார்கள். நேர்வாயில் மூலமே கும்பிட வேண்டும். திருக்கதவு திறக்கத் திருமுறைகளை ஓதுவோம் என்று தீர்மானித்தார்கள். திருமுறைகளும் வேதம்தான். இறைவர் இருடிகள் வாயிலாக வேதத்தைச் சொன்னார். நாயன்மார்கள் மூலம் தமிழ் வேதத்தைச் சொன்னார். வடமொழி வேதம் ஓதிப்பூட்டப்பட்ட திருக்கதவத்தை தென்மொழி வேதத்தை ஓதித் திறக்கப் பண்ணலாம். திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருநாவுக்கரசு நாயனாரைப் பார்த்து "திருக்காப்பு நீங்கப் பாடுமப்பர்" என்றார். அப்பரும் அந்த ஆணையை ஏற்றுக்கொண்டு பாடத் தொடங்கினார்.

பண்ணி னேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே.

திருவருள் வேண்டும் என்ற குறிப்புடன் அம்மையைப் புகழ்ந்து பாட்டைத் தொடுத்தார். அடியவர்கள் விரும்பி உம்மை வழிபட வருகிறார்கள். அவர்கள் கண்டு கும்பிடவும் நாம் கண்ணாரக் கண்டு கும்பிடவும் இறுக்கமாகப் பூட்டப்பட்டிருக்கிற திருக்கதவத்தை நீரும் வலிமையாகவே திறந்தருள் செய்ய வேண்டும். மற்றப் பாடல்களிலும் திருக்கதவம் இறுகி ஒட்டிப் போய் இருக்கிற நிலையைக் குறிக்கிறார். உமது தயவின்றி இது நிறைவேறாது. இப்படிச் சிலபாடல்கள் பாடியும் திருக்கதவு திறந்தபாடில்லை. சேக்கிழார் இதற்குச் சமாதானஞ் சொல்கிறார். "பாடப் பயன் துய்ப்பான், தெண்ணீர் அணிந்தார் திருக்காப்பு நீக்கத்தாழ்க்க" என்று மேல் வரும் பாடல்களிலும் நாயனார் கோயிலின் சூழலையும் புகழ்ந்து பாடினார். கடற்கரையிலே கழிச்சேறு மணமிருக்கும். அங்கு புன்னை மரங்களும் தாழை மரங்களும் நிற்கின்றன, நாயனார் பாடினார். புன்னை தாழை மரங்களின் மலர் நறுமணமும் நிழலும் வழிப் போவோர்க்கு இதமாயிருக்கும் என்று இப்படிப் பத்துப் பாடல்கள் பாடிவிட்டார். அப்பரின் பதிகங்கள் அநேகமாகப் பத்துப் பாடல்களில் நிறைவுபெறும். இப்பொழுது நாயனாருக்குக் கவலை பிடித்துக் கொண்டது. பதினோராவது பாடலை எடுத்தார்.

அரக்க னைவிர லாலடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீர் எம்பெருமானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க விக்கத வந்திறப் பிம்மினே.

உமது மாளிகையைச் சூழ்ந்துள்ள புன்னைகள் அன்புசுரக்கும் நிழலைக் கொடுக்கும். நறுமணம் பரப்பும். நீர் இரங்காத காரணம் என்ன? இராவணன் மாதிரி என்னையும் அரக்கனென்று எண்ணி விடாதீர். நீர் எம்பெருமான் அல்லவா? விரைவாக இத் திருக்கதவத்தை திறப்பிம்மினே. ஐயனே நீர் பஞ்சிப்பட்டால் உமது பூத கணங்களைக் கொண்டு திறப்பியும். உமது பூதங்கள் வந்து தொட்டாற் போதுமே, திருக்கதவு திறந்து விடுமே! இனிமேலும் தாழ்க்கக் கூடாது என்று இறைவர் திருக்கதவைத் திறக்கப் பண்ணினார். முன் பாடல்கள் பலவற்றிலும் நாயனார் இறைவரையே திறக்கும்படி வேண்டினார். இந்தக் கடைசிப் பாடலில் “திறப்பிம்மினே” என்று பிறவினையாற் கூவியழைத்தார். இறைவரும் பாடல்களைச் சுவைத்தது போதுமென்று கதவைத் திறந்துவிட்டார்! பூமாரி பொழிந்தது. அடியவர்களின் “அரஹர” ஆர்ப்பரிப்பு எழுந்தது. நாயன்மாரிருவரும் வீழ்ந்து வணங்கி யெழுந்து இறைவர் திருமுன்பு சேர்ந்து பல பதிகங்களை ஓதினார்கள். பின் நிறைந்த மனத்துடன் பிரியமனமின்றி மற்றைய அடியவர்க்கும் கும்பிட வழிவிட்டுத் திருக்கதவுக்கு வெளியே வந்தார்கள். யாவரும் வழிபட்ட பின் அப்பரடிகள் பிள்ளையாரை நோக்கி, “நிறைந்த கதவமடைக்கும் வகை நீரும் பாடியருளுமென” கூறினார். பிள்ளையாரும் அந்த ஆணையை ஏற்றுக் கொண்டு பதிகம் பாடத் தொடங்கினார். முதற் பாடல் முடியக் கதவும் பூட்டப்பட்டது. பதிகத்தை நிறைவு செய்தார். நாயன்மார் பல முறையும் வீழ்ந்து வணங்கினார்கள். அங்குநின்ற அடியவர்கள் பக்திப் பரவசமாய் நாயன்மாரிருவரையும் வீழ்ந்து வணங்கினார்கள். பின் நாயன்மார்கள் தாம் தங்க வேண்டிய திருமடத்தை வந்து சேர்ந்தார்கள்.

மடத்துக்கு வந்த பின் அப்பரடிகளை ஒரு பெரிய கவலை பற்றிக் கொண்டது. மாலை நேரம் தூங்க வேண்டிய வேளையாயிற்று.

அரிதிற் றிறக்கத் தாம்பாட, வடைக்க வவர்பா டியவெளிமை
கருதி, “நம்பர் திருவுள்ள மறியா தயர்ந்தே” னெனக்கவன்று,
பெரிது மஞ்சித் திருமடத்தி லொருபா லணைந்து பேழ்கணித்து
மருவு முணர்விற் றுயில்கொண்டார் வாய்மை திறம்பா வாகீசர்.

நாயனார் பின்வருமாறு நினைக்கிறார். “மிகமுயன்று பதினொரு பாடல்களும் பாடி இறைவரை மிகவும் வேண்டிய பின்தான் கதவந் திறந்தது. பிள்ளையார் ஒரு பாடல் பாடியதும் கதவம் அடைத்துக் கொண்டதே! இறைவருடைய எண்ணத்தை நான் அறிந்து கொள்ளாமல் தவறு செய்து விட்டேனோ? பிள்ளையாரையே திறக்கப்பாடச் சொல்லி நான் கேட்டிருக்கலாமோ?” இறைவரை நான் கடிந்து கொண்டதும் குற்றமோ? இப்படி எண்ணிப் பயந்து போய் மடத்தின் ஒரு புறமாக ஒதுங்கிப்படுத்தார். திருமறைக்காட்டு மணாளரை நினைந்து கொண்டே தூங்க முயன்றார். ஆழ்துயில் நிலைக்கு முன்னர் இருக்கும் அறிதுயில் நிலையில் ஒரு காட்சியைக் கண்டார். இறைவர் பொன்மேனி, திருநீற்றுப் பூச்சு முதலிய கோலத்தோடு தோன்றி, “அன்பனே நாம் வாய் மூரில் இருப்போம் எம்மைத் தொடர்ந்து அங்கு வருவாயாக” என்றார். நாயனார் நன்றாகவே உணர்ந்தார். பேச்சுக் கொடுத்தார்; பதிலும் பெற்றார். பக்கத்தில் படுத்திருந்தவர்கள் நாயனாரின் பேச்சைக் கேட்டிருக்கிறார்கள் திருவாய்மூருக்குப் போகிறார் என்பதையும் தெரிந்திருக்கிறார்கள். நாயனார் பதிகம் பாடிக்கொண்டே புறப்பட்டார். இந்தப்பதிகத்திலே ஒரு சிறப்பு என்னவென்றால் நடந்த அற்புத நிகழ்ச்சியைப் பதிகப்பாடல்கள் மூலம் நாயனார் பாடியது தான்.

முதலாவது பாடலில், திருமறைக் காட்டு இறைவர் சாதாரணமான சிவனடியார் வேடத்திலே தன்னைத் தேடி வந்து திருவாய்மூருக்கு வரச் சொல்லி அழைத்ததைச் சொல்கிறார். இரண்டாவது பாடலில் தான் உரையாடியதைக் கூறி எழுந்து இறைவர் பின்னால் போனதைச் சொல்கிறார். திருமறைக்காட்டு இறைவரை நினைந்தபடியே தான் துயின்றதையுஞ் சொல்கிறார். மூன்றாவது பாடலில் இறைவர் அண்மையில் காட்சிப்படுவதும் தூரத்தில் தோன்றுவதுமாய்ப் போய்க் கொண்டிருந்ததை அறிவிக்கிறார். நான்காவது பாடலைப் பார்ப்போம்.

கழியக் கண்டிலேன் கண்ணெதி ரேகண்டேன்
ஒழியப் போந்திலேன் ஒக்கவே யோட்டந்தேன்
வழியிற் கண்டிலேன் வாய்மூ ரடிகள்தம்
சுழியிற் பட்டுச் சுழல்கின்ற தென்கொலோ.

இப்படியே திருவாய்மூரை அண்மித்து நாயனார் நின்றார். அப்போது இறைவர் ஒரு சோலையில் மறைந்தார். நின்று கலங்கிய நாயனார், திருவீழிமிழலையில் பிள்ளையாருக்குப் பெறுமதி குறைந்த காசைக் கொடுத்தும் பின் நல்ல காசு கொடுத்ததையும் போல், இப்போ என்னை ஏமாற்றிப் பின் நன்மை செய்வார் என்ற குறிப்புப்பட ஏழாவது பாடலை அமைத்தார். இந்த நேரம் பிள்ளையாரும் செய்தியறிந்து அங்கு வந்து சேர்ந்துவிட்டார். பிள்ளையார் வந்ததும் அப்பர் சொல்கிறார். இனி இறைவர் தன்னை மறைக்க மாட்டார். உறைப்பான செந்தமிழ் பாடிக் கதவு அடைப்பித்தவர் வந்துவிட்டார். இனிக் காட்சி கொடுப்பார் என்றார். அந்தச் சோலையிலே ஒரு பொற்கோயில் தோன்றியது. இறைவர் அந்தச் சிவனடியார் வேடத்திலே கோயிலுக்குள் புகுந்தார். அப்பர் அதைக்கண்டார். ஒன்பதாவது பாடலில் இதைக் குறிக்கிறார். பத்தாவது பாடலில் இராவணனின் ஆணவத்தை அழித்தும் பின் அவனுக்கு அருள் கொடுத்ததையும் குறித்துத் தனக்கும் காட்சி தருவார் என்று நம்பிக்கையுடன் கூறுகிறார்.
இந்த வேளை பொற்கோயிலின் முன் :- திருஞானசம்பந்தர் புராணம்

அந்நிலை யணைந்த போதி லம்பிகை யுடனேகூட
மன்னிய வாடல் காட்டத் "தளிரன வளரும்" பாடிச்
சென்னியால் வணங்கி வாய்மூ ரரசொடுஞ் சென்று புக்கங்
கின்னியல் புறமுன் கூடி யிருவரும் போற்றி செய்தார்.

இறைவர் நடனக் கோலக் காட்சியில் நின்றார். பிள்ளையார் கண்டார். அப்பருக்கும் காட்டினார். பிள்ளையாரும் பாடினார். (மேல்பாடலில்) அப்பர் கவலை ஏமாற்றம் எல்லாம் போய் மிக மிக மகிழ்ந்து நெகிழ்ந்து பாடினார். இத் திருத்தாண்டகப் பதிகத்தில் இறைவருடைய தடத்த மேனியழகை முழுமையாக வர்ணிக்கிறார். பின் இறைவரின் காட்சியும் மறைந்தது. பொற்கோயிலும் மறைந்தது. நாயன்மாரிருவரும் திருவாய்மூர் போய் அங்கு வழிபட்டுப் பழைய படி திருமறைக்காட்டுக்குத் திரும்பினர்.

அப்பர் திருப்திப்பட்டு அமைதியடைந்தார். திருமறைக்காட்டில் இறைவர் கருதிய படியே பிள்ளையார் தன்னைக் கதவு திறக்கப்பாடச் சொன்னதையும் இங்கு திருவாய் மூரில் பிள்ளையாருக்குக் காட்சி காட்டி அவர் மூலம் தான் கண்டதையும் சேர்த்துப் பார்த்தார். தன்மேல் எந்தக் குறையுமில்லை என்று தெளிந்தார் எல்லாம் இறைவர் கருத்தே.

வாழ்க நாயன்மார் புகழ்!

# சந்தான குரவர்கள்

ச. வேதநாராயணன்

சந்தானம் என்பதற்கு சீடப்பரம்பரை என்று பொருள் கொள்ளலாம். இந்தச் சீடப் பரம்பரை திருக்கைலாயத்தில் தொடங்கியது. முதல் குரு தட்சிணாமூர்த்தியாய் எழுந்தருளிய ஸ்ரீகண்ட பரமசிவன் ஆவார். அவருடைய சீடர் நந்தி தேவர். அவரிடம் உபதேசம் பெற்றவர்கள் சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர் ஆகியோர். சனற்குமாரரிடம் பயின்றவர் சத்தியஞான தரிசினிகள். அவரிடம் உபதேசம் பெற்றவர் பரஞ்சோதி முனிவர். இந்த நால்வரும் தேவபரம்பரை. அகச்சந்தான குரவர்கள் கயிலாயவாசிகள்.

பரஞ்சோதி முனிவரிடம் உபதேசம் பெற்றவர் மெய்கண்டார். அவருடைய சீடர் அருணந்தி சிவம். அவரிடம் உபதேசம் பெற்றவர் மறைஞானசம்பந்தர். அவர் உமாபதி சிவத்துக்கு உபதேசம் செய்தார். இந்த நால்வரும் பூதப் பரம்பரை. புறச்சந்தான குரவர்கள் பூவுலகு வாசிகள்.

இதைத்தவிர மேலும் பல சீடப்பரம்பரைகள் இருந்தன. இவைகள் இப்போது இருப்பதாய்த் தெரியவில்லை. இவையாவன.
சனகரிடமிருந்து உண்டானவை 2.. சனற்குமாரர் 2.. சனந்தனர் 3.. சனாதனர் 2..சிவயோக மாமுனிகள் 1 பதஞ்சலி 1 வியாக்கிரபாதர் 1 திருமூலதேவர் 7 .. சனற்குமாரரின் ஒரு சீடப்பரம்பரைதான் இப்போது எஞ்சியுள்ளது.

பூவுலகில் சீடப்பரம்பரை மெய்கண்டார் முதலாகத் தொடங்குவதால் சைவ ஆதீனங்களின் குருபரம்பரை திருக்கயிலாய பரம்பரை அல்லது மெய்கண்டார் சந்தானம் என அழைக்கப்படு கிறது. சந்தானக்குரவர்களின் வரலாறுகளைப் பார்ப்போம்.

**மெய்கண்டார்** ( 13ஆம் நூற்றாண்டு கி.பி 1223 )
பிறந்த ஊர் பெண்ணாடகம் (தூங்கானைமாடம்). இக்காலத்தில் பெண்ணாடம் என்று அழைக்கப்படுகிறது. தந்தையார் அச்சுத களப்பாளர். மகப்பேறு இல்லாமல் மனம் வருந்திய அவர் தம் குலகுருவாகிய திருத்துறையூர் சகலாகம பண்டிதரிடம் தன் குறையைக் கூறினார். அவருடைய அறிவுரைப்படி களப்பாளர் மனைவியுடன் திருவெண்காடு சென்று முக்குளநீர் ஆடி இறைவனை வழிபட்டார். அதன் பயனாய்த் தோன்றிய ஆண்மகவுக்கு சுவேதவனப்பெருமாள் என்று பெயரிட்டார். குழந்தை திருவெண்ணெய்நல்லூரில் உள்ள தன் மாமன் வீட்டில் வளர்ந்தது.

மூன்று வயதுக் குழந்தை ஒருநாள் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தது. பொதிகையில் குறுமுனியைக் காண்பதற்குக் கயிலாயத்திலிருந்து விண்வழியில் சென்றுகொண்டிருந்த பரஞ்சோதி முனிவர் அக்குழந்தையைக் கண்டார். அச்சிறுவனின் மனப்பக்குவத்தை அறிந்த அவர் கீழே இறங்கி குழந்தைக்குப் பரிச திருநோக்க தீக்கைகளும் சிவஞான உபதேசமும் செய்தருளி மெய்கண்டார் என்ற தீட்சா திருநாமமும் இட்டுத் தன் பயணத்தைத் தொடர்ந்தார். குரு முகமாக ஞானம் பெற்ற மெய்கண்டார் சைவசித்தாந்த சாத்திரமரபை தொடங்கி வைத்தார். இவருக்குப் பல சீடர்கள் இருந்தனர். இவரது தந்தையின் குலகுருவாகிய சகலாகம பண்டிதரே இவருடைய சீடர் ஆனார். மெய்கண்டார் திருவெண்ணெய் நல்லூரில் முத்தி பெற்றார்.
சாத்திரத்தின் முதல் நூலாகிய சிவஞானபோதம் இவரால் அருளப்பெற்றது. 12 சூத்திரங்களையும் 40 அடிகளையும் உடைய இச்சிறு நூல் பொருளால் பெரிய ஒப்பற்ற நூல்.

**அருணந்தி சிவம்**

இவருடைய ஊர் திருத்துறையூர். அச்சுத களப்பாளரின் குலகுரு. சகல ஆகமங்களிலும் வல்லுனர். இவர்தான் களப்பாளரைத் திருவெண்காடு செல்லும்படி அறிவுறுத்தினார். களப்பாளரின் 3 வயது மகன் ஒருநாள் ஆணவ மலத்தைப்பற்றி உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார். அங்கு வந்த பண்டிதர் அக்குழந்தையை மடக்குவதற்காக ஆணவத்தின் சொரூபம் யாது என வினவினார். மெய்கண்டார் வாயால் விடை கூறாமல் தன் சுட்டுவிரலால் இவரையே சுட்டிக்காட்டினார். பண்டிதரின் ஆணவம் அடங்கி பரிபக்குவம் உண்டாகி மெய்கண்டாரின் சீடர் ஆனார். அருள்நந்தி என்ற தீட்சாநாமமும் பெற்றார். மெய்கண்டாரை அடுத்துச் சந்தான குரவர்களில் இரண்டாமவரும் ஆனார். இவரது சீடரான மறைஞான சம்பந்தருக்கு உபதேசம் செய்து திருத்துறையூரில் முத்தி பெற்றார்.

இவர் அருளிய முதல் நூல் சிவஞானசித்தியார். இது சாத்திர தோத்திர இலக்கியநயம் மிக்க ஒரு சிறந்த நூலாகும். இந்நூல் பரபக்கம் (ஏனைய சமயவாதிகளின் பக்கத்தை மறுத்துரைப்பது) சுபக்கம் (தம் பக்கமாகிய சைவசித்தாந்தத்தை விரித்துரைப்பது) என்ற இரு பாகங்களை உடையது. இவருடைய இன்னொரு நூல் இருபாஇருப.்.து.

**மறைஞானசம்பந்தர்**

இவர் பெண்ணாடகத்தில் சாம வேத பராசர கோத்திர அந்தணர் மரபில் பிறந்தார். திருக்களாஞ் சேரியில் வாழ்ந்தார். அருணந்தி சிவாசாரியாரிடம் உபதேசம் பெற்று அவருக்குப்பின் மூன்றாம் சந்தானகுரவராக விளங்கினார். இவருடைய சீடர்களில் சிறந்தவர்கள் இருவர் அருள் நமச்சிவாயரும் உமாபதி சிவாசாரியாரும். இவர் திருக்களாஞ்சேரியில் முத்தி அடைந்தார். சதமணிக்கோவை என்ற நூல் இவரால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

**உமாபதி சிவம்** ( கி.பி 1313ஆம் ஆண்டை ஒட்டி )

இவர் சிதம்பரத்தில் தில்லை வாழ் அந்தணர் மரபில் தோன்றினார். தில்லைக்கூத்தனுக்கு வழிபாடு ஆற்றும் தீக்ஷிதர்களில் சிறந்தவராக விளங்கினார். இதன் காரணமாகச் சிவிகை (பல்லக்கு) ஏறிச் செல்லும் தகுதியைப் பெற்றிருந்தார். தமிழ் வடமொழி இரண்டிலும் வல்லவராய் விளங்கினார்.

ஒருநாள் இவர் தில்லைத் திருவீதியில் பகல் தீவர்த்தி முதலிய விருதுகளுடன் சிவிகையில் சென்று கொண்டிருந்தார். அந்நேரம் மறைஞானசம்பந்தரும் அவ்வீதியில் பிச்சை ஏற்றுக் கொண்டிருந்தார். அவர் சிவிகையைப் பார்த்தவுடன் பட்ட கட்டையிற் பகற்குருடு போகுது பாரீர் எனக்கூவினார். உமாபதி இக்கூற்றைச் செவிமடுத்தார். ஞான உபதேசம் பெறும் நல்லகாலம் வந்தது. பல்லக்கினின்றும் குதித்து மறைஞானசம்பந்தரை நோக்கி ஓடினார். அதைப்பார்த்த சம்பந்தரும் ஓடினார். அவரைத் தொடர்ந்து உமாபதிசிவமும் ஓடினார். சிறிது தூரம் ஓடியபின் தெரு ஓரத்தில் பாவுக்குக் கஞ்சி போட்டுக் கொண்டிருந்தவர்களிடம் அருந்தக் கஞ்சி கேட்டார் சம்பந்தர். கொடுக்கப்பட்ட கஞ்சியைக் குடிக்கும்போது முழங்கையிலிருந்து வழிந்த கஞ்சி எச்சத்தை உமாபதியார் தம் கையிலேந்தி வாயில் இட்டுக்கொண்டார். அவருடைய பரிபக்குவத்தை உணர்ந்த மறைஞானசம்பந்தர் உமாபதியாரைச் சீடனாக ஏற்றுக்கொண்டார். உபதேசம் பெற்ற உமாபதியார் நடராசரின் பூசையோடு தவவாழ்விலும் தலைப்பட்டார்.

உமாபதியாரின் செயலை ஏற்காத தீக்ஷிதர்கள் அவரைத் தங்கள் கூட்டத்திலிருந்தும் கோயிற் பூசையிலிருந்தும் விலக்கி வைத்தனர். உமாபதியார் சிதம்பரம் அருகிலுள்ள கொற்றவன்குடிக்குக் குடிபெயர்ந்தார். அங்கிருந்தே நடராசப்பெருமானை மானசீகமாகப் பூசை செய்து வந்தார். ஒருநாள்

தில்லைக்கோயிலில் பூசைப்பெட்டகத்திலிருந்த பெருமானைக் காணவில்லை. தீக்ஷிதர்கள் திகைத்து வருந்தியபோது தான் உமாபதியின் வழிபாட்டில் உள்ளோம் என்ற அசரீரி எழுந்தது. உமாபதியாரின் பெருமையை உணர்ந்த தீக்ஷிதர்கள் அவரை மீண்டும் கோயில்பூசை செய்ய அழைத்தனர். மற்றொரு முறை கோயில் கொடி ஏறாமல் தடைப்பட்டபோது உமாபதியார் கொடிக்கவி பாட, கொடியேறிற்று. இறைவனே எழுதிக்கொடுத்த சீட்டிற்கு இணங்க பெற்றான் சாம்பான் என்ற நந்தனார் மரபினராகிய அன்பர்க்கு சத்தியோநிர்வாண தீக்கை செய்து முத்தி அருளினார். இவருடைய சீடர்களில் குறிப்பிடத்தக்கவர் அருள்நமச்சிவாயர் ஆவர். உமாபதியார் கொற்றவன்குடியிலேயே முத்தி அடைந்தார்.

சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கில் எட்டு நூல்கள் இவரால் அருளப்பட்டவை. இவை சித்தாந்த அட்டகம் என்று அழைக்கப்படுகின்றன. அவை சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்ப.:.றொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறிவிளக்கம், சங்கற்பநிராகரணம் என்பன ஆகும். இவற்றைத் தவிர கோயிற்புராணம், திருப்பதிகக்கோவை, திருமுறைகண்ட புராணம், சேக்கிழார் புராணம், சிவத்தல சிவநாம சத்திநாமக் கலிவெண்பா ஆகியவையும் உமா பதியாரால் இயற்றப்பட்டவை. சில வடமொழி நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.

இவருக்குப் பிறகு, அருணமச்சிவாயர், சிவப்பிரகாசர், நமச்சிவாயமூர்த்திகள் என்று சீடப் பரம்பரை தொடர்கிறது.

இனி. சமய குரவர்களுக்கும் சந்தான குரவர்களுக்கும் உள்ள வேறுபாடுகளை நோக்குவோம் .

திருமுறைகளைத் தோற்றுவித்த சம்பந்தர். திருநாவுக்கரசர். சுந்தரர். மாணிக்கவாசகர் ஒருவருக்கொருவர் சீடர் அல்லர். சந்தான குரவர்கள் ஒருவருக்கொருவர் சீடர் ஆவர். முன்னவர் தோத்திரங்களையும் பின்னவர் சாத்திரங்களையும் அருளினார்கள். சமயகுரவர்கள் கோயில் கோயிலாகச் சென்று பாடினார்கள். சந்தானகுரவர்கள் மடங்களில் இருந்து பாடம் சொன்னார்கள். தோத்திரங்கள் இறைமுன்னர் ஓதப்படுகின்றன. சாத்திரங்கள் இறைமுன்னர் பாடப்படுவதில்லை. சமய குரவர்களுக்குச் சீடர் இல்லை. சந்தானகுரவர்களுக்குச் சீடப்பரம்பரை உண்டு. திருமு றைகள் இலக்கியம் போன்றவை. சித்தாந்த சாத்திரங்கள் இலக்கணம் போன்றவை. கோயில்களில் சமயகுரவர்களின் திருவுருவங்கள் நின்ற நிலையிலும் சந்தான குரவர்களின் பிர திமைகள் அமர்ந்த நிலையிலும் காட்சி அளிக்கும்.

(நன்றி -- சைவ ஆதீனங்கள் -- ஆசிரியர் ஊரன் அடிகள்)

## ஸ்ரீ தியாகராஜர் ஏன் தமிழில் பாடவில்லை?

தியாகையர், தமிழகத்தின் இருதய ஸ்தானமாயுள்ள திருவையாறில் பிறந்து வளர்ந்தவர். ஆகவே அவருக்குக் கட்டாயம் தமிழ் தெரிந்திருக்கவேண்டும். அப்படியிருந்தும் ஏன் அவர் தமிழிலே ஒரு கீர்த்தனை கூட பாடவில்லை?

ஏனெனில் அந்த மகான் கவி இருதயம் படைத்தவர். தமது உள்ளத்தில் பொங்கிய உணர்ச்சிகளை இன்னிசையுடன் ஸாஹித்யமாகப் பொழிந்தவர். இப்படிப் பொழிவது தாய்மொழியிலேதான் சாத்தியமாகும்; வேறு பாஷைகளின் மூலம் சாத்தியமில்லை என்பதை நன்கு அறிந்தவர். “அந்நிய பாஷையொன்றின் மூலமாகக் கவிதையை அநுபவிக்கலாமென்று நினைப்பது ஒருவன் தன் காதலியிடம் தன் காதலை வெளிப்படுத்த வக்கீல் வைத்தது போலத்தான்!.”

நன்றி: ஆனந்தவிகடன்


உங்கள் குடும்பத்தின் பாதுகாப்பிற்கு
உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்
Select
Life Care
Protect the one thing
That's important to you
Your family.
Death Benefits
Critical illness benefits
Death or earlier critical illness benefits
Unemployment benefits
Disability income benefits
Level term assurance
Decreasing term assurance for mortgages
Select life care is an introducer to Select Mortgage Solution. Select Mortgage Solution is directly authorised and regulated by the financial services authority.
www.select.gb.com
0845 470 1500

# இசையுலக இளவரசன் – ஜி. என். பாலசுப்பிரமணியம்

- ரிஷி சர்மா

**இசையில் ஒரு புதிய பாணியை உருவாக்கி, பல பெரிய வித்வான்களை சிஷ்யராகப் பெற்ற திரு ஜிஎன்பி அவர்களின் நூற்றாண்டு இது. அவரின் பணியை நினைவுகூரும் வகையில் இக் கட்டுரை பிரசுரமாகிறது.**

1928ஆம் ஆண்டு. சென்னையிலுள்ள கபாலீசுவரர் கோயில் திருவிழா. அன்று பாட இருந்த கலைஞர் வராததால் இளைஞரான பாலசுப்பிரமணியம் மேடையேறி அற்புதமான ஒரு கச்சேரி செய்தார், இது அவருடைய முதல் கச்சேரி. அதிலிருந்து அவருடைய புகழ் மேலும் மேலும் வளர்ந்தது.

பாலசுப்பிரமணியம் கூடலூரில் 1910ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் தேதி G.V.நாராயணசுவாமி ஐயர், விசாலம் தம்பதியருக்கு மகவாய்ப் பிறந்தார். ஆங்கில இலக்கியத்தில் B.A பட்டம் பெற்ற இவர் கரூர் சின்னசாமி ஐயர், மதுரை சுப்பிரமணிய ஐயர் ஆகியோரிடம் சங்கீதம் கற்றுக்கொண்டார்.. பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் டைகர் வரதாசாரியாரிடம் பயின்றார்.

பண்டிதர்களும் பாமரர்களும் அவர் இசையால் கவரப்பட்டார்கள். அவருடைய சங்கீதம் ஜாதி மத இனத்துக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. இனிமையான குரல், துரிதமான நடை, பிருகாக்கள் கிருதிகளை அநாயாசமாகப் பாடும் திறமை ஆகியவை மக்களைப் பரவசப் படுத்தின. வேங்கடம கியின் சதுர்தந்தி பிரகாசிகா நூலை நன்கு கற்று, தன்னுடைய ஆலாபனைகளையும் ஸ்வர கற்பனைகளையும் சிறப்பாக அமைத்துப் பாடினார். கனராகங்களைத் தவிர ஆந்தோளிகா, நளினகாந்தி, வசந்தபைரவி, ஜோதிஸ்வரூபிணி ஆகிய ராகங்களையும் திறம்படக் கையாண்டார்.

உஸ்தாத் படேகுலாம் அலிகானிடமிருந்து காவதி ராகத்தைக் கற்றுக்கொண்டு அவருக்கு ஆந்தோளி காவைக் கற்றுக்கொடுத்தார்.

இவர் சிறந்த பாடலாசிரியரும் ஆவார். இருநூறுக்கும் மேற்பட்ட கிருதிகள், வர்ணங்கள், தில்லானா ஆகியவற்றை தமிழ் சமஸ்கிருதம் தெலுங்கு ஆகிய மொழிகளில் இயற்றியுள்ளார். ஆனால் இவரது படைப்புக்களை (ஒன்றைத்தவிர) இவர் பாடியதே இல்லை. இவரே உருவாக்கிய இராகங்களில் சில சந்திரஹஸிதா, அம்ருதபேகாக், சிவசக்தி, சாயாரஞ்சனி, சாரங்கதரங்கிணி ஆகியவை. இவரது படைப்புக்கள் மூன்று பிரிவுகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இவர் மிகவும் அடக்கமான மனிதர். தன் பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் மதித்து நடந்தார். இளம் வித்துவான்களை மிகவும் ஊக்குவித்தார். இவரது சீடர்கள் M.L.வசந்தகுமாரி, ராதா ஜயலட்சுமி தஞ்சாவூர் கல்யாணராமன், திருச்சூர் ராமசந்திரன் ஆகியோர். இவர் ஐந்து திரைப்படங்களில் நடித்தவர். பாமாவிஜயம் சதிஅனசூயா சகுந்தலை ருக்மாங்கதன் உதயணவாசவதத்தா ஆகிய படங்கள் அவை.

இவருடைய வாழ்க்கையில் நடந்த சுவையான சம்பவங்கள். இவர் நகைச்சுவை மிக்கவர் பெரும்பாலும் தன்னையே தாழ்த்திக் கொள்வார். தன்னை G.N.B (Good for Nothing Bhagavathar) என்று கூறுவார்.

ஒருமுறை தனது மோட்டார் வண்டியை விற்க விரும்பினார். வாங்க வந்தவர் ஓட்டிப் பார்த்துவிட்டு வண்டியில் எல்லா பாகத்திலிருந்தும் சத்தம் வருகின்றது என்று புகார் பண்ணினார். அதை GNB மறுத்தார். வண்டியோட horn ஐ அமுக்கிப் பாருங்கோ. சத்தமே வராது என்று 'ஜோக்' அடித்தார்.

இன்னொரு துணுக்கு: .. பிள்ளையாருக்கு ஏன் திருமணம் ஆகவில்லை தெரியுமா? பிள்ளையார் தமது கல்யாணத்துக்கு GNB கச்சேரிவைக்கவேண்டும் என்று சொன்னாராம். ஆனால் date தான் இன்னும் கிடைக்கவில்லை.

திரு G.N. பாலசுப்பிரமணியம் 1965ஆம் ஆண்டு மே மாதம் 1ஆம் தேதி விண்ணோரை மகிழ்விக்கச் சென்றுவிட்டார்.

2010 ஆம் ஆண்டு திரு பாலசுப்பிரமணியம் அவர்களின் நூற்றாண்டு வருகிறது. சென்னையில் விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கொண்டாட்டங்கள் ஜனவரி 2009ல் தொடங்கி ஜனவரி 2010ல் முடிவடைகின்றன.

அவரைப் பற்றி மேலும் தெரிந்துகொள்வதற்கு கீழ்க்கண்ட இணையதளத்திற்குச் செல்லவும்.
www.gnbalasubramaniam.com



## நவாலி சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள்

நவாலி என்றதும் ஈழத் தமிழர்களுக்கு சோமசுந்தரப் புலவர் நினைவுக்கு வருவர். அந்த ஊரிலே சிவஸ்ரீ சாமி குருக்கள் தம்பதிக்கு 14.04.1925ல் மகனாகப் பிறந்தவர் பிரதிஷ்டா சிரோமணி சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்கள். இவ்வாண்டு ஜனவரி மாதம் நான்காம் நாள் அவர் சிவபதம் அடைந்த செய்தி நம் மனதை உலுக்கிவிட்டது. ஒரு நிமிடம் கண்களை மூடினேன். அவரின் கம்பீரமான சிவாசாரியத் தோற்றம் பொலிவாக அகக் கண்ணிலே தெரிந்தது. சுமார் 50 ஆண்டுகள் சிறந்த ஒரு சிவாசாரியராக இவர் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதவை. மஹா கும்பாபிஷேகங்கள், மஹோற்சவங்கள், யாகங்கள் எனப் பல சிவப் பணிகளையும் ஆசாரிய அபிஷேகம், வைதிக கிரியைகள் என அந்தணர் பணிகளையும் செய்துள்ளார். யாழ்ப்பாணம், திருகோணமலை, மலையகம், கண்டி, கொளும்பு என இலங்கையிலுள்ள பல இடங்களில் அமைந்த பற்பல கோயில்களிலே பெருஞ்சாந்தி விழாக்களை தலைமை தாங்கிச் செய்த பெருமை இவரைச் சேரும். தான் செய்கின்ற கிரியைகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து பத்தி சிரத்தையுடன் செய்யும் பாங்கு இவருக்கே தனித்துவமானது. மரபு நெறி பிறழாது ஆகம விதிமுறை களைக் கடைப்பிடிப்பவர். உற்சவ காலங்களிலே உற்சவமூர்த்திக்கு இவர் செய்யும் உபசார பூசைகள் பார்ப்போரைப் பரவசப்படுத்தும். பல சிவாசாரியப் பெருமக்கள், ஏகலைவன் எப்படி துரோணாசாரியரை தன் மானசிகக் குருவாகக் கொண்டானோ அதுபோல, இவரின் முறைகளைப் பார்த்தே கற்றுக்கொண்டார்கள்.

இலங்கையில் மட்டுமன்றி சிங்கப்பூர், மலேசியா, லண்டன், கனடா, அவுஸ்திரேலியா நாடுகளிலும் குருக்கள் கும்பாபிஷேகங்கள் செய்துள்ளார்கள். லண்டனுக்குத் தெற்கே சறே, ஸ்டோன்லி என்ற இடத்தில் அமைந்த ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் கோயில் கும்பாபி ஷேகமும் குருக்கள் தலைமையில் நடந்தது.

நவாலி 'அட்டகிரி' முருகன் குலதெய்வம் எனினும் யாழ்ப்பாணத்தில் பெருமாள் கோயிலிலே பிரதம குருவாக இருந்த காரணத்தால் பெருமாளையே இவர் வழிபட்டுவந்தார். தமது இல்லத்துக்கும் "வேங்கடநிவாஸ்" எனப் பெயரிட்டிருந்தார். அதனாற் போலும் பெருமாளுக்குரிய தனுர் மாதத்தில்

.... அறிவொன்று மில்லாத ஆய்குலத்து உன்தன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறையொன்று மில்லாத கோவிந்தா உன்தனொடு
உறவேல் நமக்கிங்கு ஒழிக்க ஒழியாது... என்ற திருப்பாவை அடிகளுக்கமைய ஸ்ரீவைகுந்தவாசனின் மலரடிகளைத் தழுவினார்போலும்.

**- கலாநிதி ராம் தேவலோகக் குருக்கள்**

**ACROSS THE GLOBE** **CANADA, USA, UK, UAE, OMAN, INDIA, MALAYSIA, SINGERPORE**




**MANOR PARK (EASTHAM)**
**300 HIGH STREET NORTH**
**MANOR PARK,**
**LONDON - E12 6SA.**
**U.K.**


**TEL: 020 8552 4677**
**FAX: 020 8548 9454**

**UK FRANCHIES BY**



**RAYNERS LANE BRANCH**
**403, ALEXANDRA AVENUE**
**RAYNERS LANE**
**HARROW - HA2 9SG**
**U.K.**

**TEL: 020 8869 9966**
**MOB: 07956 877 077**



தங்கத்தின் உணர்வுகளில்
மங்காத பெயர்.....
தாரணி
ஜூவல்லரி
Tharani Jewellery
54, Ealing Road, Wembley, Middlesex, HA0 4TQ
020 8902 6777, 020 8902 7111
www.tharanijewellery.com
எது இருக்கும் என்ற சிந்தனைக்கே இடமில்லை.....
இல்லையென்பதில்லை.......!

# திரு சி வைத்தியலிங்கம் (1911 – 1991)

- யமுனா சுமங்கலி தருமேந்திரன்

இலங்கையின் வடபகுதியில் உள்ள ஏழாலை என்ற சிறு கிராமத்தில் 1911ம் ஆண்டு தைத் திங்கள் 7ஆம் நாள் சிவப்பிரகாசம் சின்னப்பிள்ளை தம்பதியினரின் இரண்டாவது மகனாகப் பிறந்தார் திரு வைத்திலிங்கம் அவர்கள்.

இக்கிராமத்தின் இயற்கை வளமும் அதன் சூழலும் மனதில் நன்றாக பதிந்த காரணமும் கற்பனைத் திறனும் இருந்ததாலும் என் தந்தை இளமைக்காலம் தொட்டே எழுத்துத்துறையில் ஆர்வம் கொண்டிருந்தார்.

தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் மணிக்கொடி குழுவைச் சேர்ந்த படைப்பாளிகளோடு ஈழத்துப் படைப்பாளிகளும் யாழ்ப்பாணத்து ஈழகேசரி இதழ் மூலம் எழுதி வெளியிட்டது இலக்கிய வரலாற்றில் கவனிக்கப்பட வேண்டியதொன்று.

ஏற்கனவே ஆனந்தவிகடன் மூலம் புதிய தமிழ் முழக்கத்தில் ஆசை கொண்டிருந்த ஈழத்தவர்களில் உயர்தர தமிழ்க்கல்வி கற்ற தமிழ் ஆசிரியர்களும் மற்றையவர்களும் மணிக்கொடியின் தோற்றத்தைத் தொடர்ந்து அந்த வழியில் புதிய வடிவம் பெற்ற ஈழகேசரியில் புதிய வகைச் சிறு கதைகளை எழுதினார்கள். இவர்களில் இலங்கையர்கோன் என்ற சிவபாதசுந்தரம் சி. வைத்தியலிங்கம் க.தி.சம்பந்தன் என்ற மூவரும் ஈழத்துச் சிறுகதை மூலவர்கள் என மதிக்கப் பெற்றவர்கள்.

தனது 17வது வயதில் இருந்தே சிறுகதைகள் எழுதத் தொடங்கிய சி.வைத்தியலிங்கம் புதுமைப்பித்தன் குபரா ஆகியோரின் எழுத்துக்களுடன் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

**ஆனந்தவிகடன் வார இதழின் ஆசிரியரான கல்கி (கிருஷ்ணமூர்த்தி) கொழும்பில் தங்கி இருப்பதாக அறிந்து அவரைச் சந்தித்து தனது முதல் படைப்பான 'பாற்கஞ்சி' என்ற கதையைக் கொடுத்து ஆனந்தவிகடனில் பிரசுரிக்குமாறுக் கேட்டுக்கொண்டார். தனது படைப்பு ஆனந்தவிகடனில் வந்துள்ளதோ என்று வாரம் தோறும் ஏங்கிய வண்ணம் எதிர்பார்த்திருந்தார். சில மாதங்கள் கழித்து இவரது நம்பிக்கை தளரும் தறுவாயில் பாற்கஞ்சியை முத்திரைக் கதையாக வெளிவர வைத்து பதினைந்து ரூபாயைப் பரிசாக கல்கி (கிருஷ்ணமூர்த்தி) அனுப்பி இருந்ததைத் தன்னால் மறக்கமுடியாது என்று அடிக்கடி சொல்லுவார்.**

என் தந்தையின் கதைகள் கிராமப்புறக் காட்சிகளையும் இயற்கை வளங்களையும் வர்ணனையாக அலங்கரித்திருப்பது வாசகரின் நினைவில் என்றும் அழியாது நிற்கும். தனது தாய் தமிழ் என்றால் தந்தை ஸமஸ்கிருதம் என்று கூறியது இன்றும் என் காதில் ரீங்காரமாக ஒலித்துக் கொண்டே இருக்கிறது. இந்த மணிப்ரவாள நடை இவரது கதைகளில் அதிகம் பிரதிபலித்திருப்பதைக் காணலாம்.

அழியாப்பொருள் இவரின் வாழ்க்கையில் நடந்த உண்மைச் சம்பவமாகும். திருமணத்தின் பின்னர் இவரது மனைவியான என் தாய் இந்தக் கதையை வாசித்துவிட்டு இந்தக் கதையில் வரும் கதாபாத்திரம் இன்னமும் அழியாப்பொருளாக உங்கள் மனத்தில் இருக்கிறாளோ எனக்கேட்டு அந்தக்கதையை எறிந்த சுவாரசியமான நிகழ்வும் உண்டு ( அம்மா மன்னிக்கவும் )

ஆங்கிலத்திலும் வடமொழியிலும் சிறப்புப் புலமை பெற்றிருந்த இவர் காளிதாசனின் சாகுந்தலம் குமாரசம்பவம் மேகதூதம் ஆகியவற்றை மொழி பெயர்த்ததுடன் ரஷ்ய இலக்கிய மேதை இவான் துர்க்னில்வின் 'On the eve' என்ற நூலையும் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். மேலும் பல மொழி பெயர்ப்புக்கள் செய்ததாக அறிகிறேன். அவை ஒன்றும் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கம் என் மனதுக்குள் இருந்து கொண்டிருக்கிறது.

பல கதைகள் எழுதிய போதிலும் அவற்றை நூல் வடிவில் காணவேண்டும் என்ற ஆவல் தன் 60 வயதின் பின்னர் தான் இவருக்கு உதித்தது. இந்த இடைக்கால வேளையில் பல கதைகள் மற்றையவர்களிடம் கொடுத்து திரும்பக் கிடைக்காமல் போய்விட்டன. கையில் கிடைத்த 18 கதைகளில் 17 கதைகள் 1990 நவம்பர் மாதம் முதற் பதிப்பாக அன்னம் பதிப்பகத்தால் அச்சேற்றி "கங்கா கீதம்" என்ற பெயருடன் வெளியிடப்பட்டது.

இந்த வெளியீட்டின் பிரதி என் தந்தையின் கையில் கிடைத்தபோது அவர் அடைந்த உவகை ஒரு தாய் தனது முதற் குழந்தையைப் பெற்றதும் அந்தக் குழந்தையைக் கையில் எடுத்துத் தடவி முகர்ந்து மீண்டும் மீண்டும் குழந்தையைக் கொஞ்சிக் குலாவுவது போன்று இருந்தது என்றால் அது மிகையாகாது.

கங்கா கீதம் முதற்பதிப்பை வெளியிட முன்னின்று முழு முயற்சியுடன் உழைத்த தந்தையின் ஆத்ம நண்பன் காலம் சென்ற திரு சோ.சிவபாதசுந்தரத்திற்கு நாம் என்றும் கடமைப் பட்டுள்ளோம்.

முதற்பதிப்பில் தன் எழுத்துலகின் முதற் குழந்தையாம் பாற்கஞ்சி பதிக்கப்படாதது இவர் மனதில் ஒரு குறையாக இருந்தது. இக்குறையைச் சரி செய்ய என் அம்மா விரும்பினார். இந்த விருப்பை தன் மருமகனான என் கணவர் தருமேந்திரனிடம் கூற அவர் அப்பணியை 'த்வனி' புத்தக நிலையத்தினரூடாக 1997 டிசம்பர் மாதம் இரண்டாவது பதிப்பாக வெளியிடச்செய்தார்.
கொழும்பு மாநகரசபையில் 40 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்ற பின் சிலகாலம் ஏழாலையில் வசித்தார். அதன்பின் 1986இல் இலண்டனுக்குக் குடிபெயர்ந்து எம்முடன் வாழ்ந்து வந்தார்.


உடல் நலிவுற்றுத் தன் 80ஆம் அகவையில் 1991ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் நாள் இயற்கை எய்தினார்.

இவரின் கங்கா கீதம் இலண்டனில் உள்ள தமிழ் தொலைக்காட்சி நிலையங்களாலும் I.B.C தமிழ் வானொலியிலும் பிரெண்ட் நகராட்சி மன்றம் ஈலிங்கு சாலை (Road) நூலகம் வெம்பிளி வாசகர் வட்டத்தினாலும் ஆய்வு செய்யப்பட்டதும் ஈழத்தின் யாழ் வளாகப் பல்கலைக்கழகத்தின் தமிழ் உயர்தர பட்டதாரிகளுக்கு ஒரு பாடநூலாக இருப்பதும் நூலின் ஆசிரியருக்குப் பெருமை சேர்ப்பது. அவரின் படைப்பான கங்கா கீதம் என்றும் அழியாப் பொருளாகத் தமிழ் கூறும் நல்லுலகம் இருக்கும்வரை இருக்கும் என்பதில் ஓர் ஐயமும் இல்லை

• ***அடுத்த இதழில் ஒரு சிறுகதை பிரசுரமாகும்***

**தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தாற் காணப் படும்** - திருக்குறள் 12-4

# சங்க நிகழ்வுகள்

ஆருத்திரா தரிசனம் 01-01-2010



பெரியபுராண சொற்பொழிவு
18-12-2009



நாவலர் நினைவு நாள் இசை நிகழ்ச்சி
13-12-2009

நால்வர் கோட்டம் கட்டட வேலைகளும் அங்கு உறையும் சிறுவர்களும்.






# சிறுவர்களால் சிறுவர்களுக்கு...........










திருப்பதி நவஜீவன் கண் மருத்துவ மனையில் சிகிச்சை பெறுவோர்.





கல்முனை நால்வர் கோட்ட மாணவர்கள்



வவுனியாவில் மனநலம் குன்றியோரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த கொடுக்கப்பட்ட பொருள்கள்.








அறிவொளி வளையம்

# சிறுவர்களால் சிறுவர்களுக்கு...........

சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஓர் அங்கமாக அறிவொளி வளையம் இயங்கி வருகிறது. இதில் யோகப் பயிற்சி முக்கிய இடம் பெறுகிறது. யோகப் பயிற்சியை மக்களிடையே பரப்புவது இவ்வமைப்பின் ஒரு குறிக்கோள். அது தவிர கருத்தருங்குகள் போன்ற சிந்தனையைத் தூண்டும் வகையில் பல நிகழ்வுகளும் நடைபெற ஏற்பாடுகள் ஒழுங்காகச் செய்யப்படுகின்றன. பெரியவர்களும் சிறுவர்களும் என்று எல்லா வயதினரும் இந்த அறிவொளி வளையம் ஏற்பாடு செய்யும் நிகழ்வுகளிலே பங்குபெற்றுப் பயனடைந்து வருகின்றனர்.

அறிவொளி வளையத்தில் சிறுவர்கள் ஈடுபட்டு நல்ல விடயங்கள் பற்றிச் சிந்திக்கவும் தரும விடயங்களை மேற்கொள்ளவும் ஊக்கம் அளிக்கப்படுகின்றது. அதன்வழி சிறுவர்கள் சென்ற ஆண்டு இலங்கையிலும் இந்தியாவிலும் சில தரும காரியங்களைச் செய்துள்ளனர். இங்கே தாமாகவே நிதி திரட்டும் நிகழ்வுகளை நிகழ்த்தி வந்த பணத்தை வெவ்வேறு மூன்று நிறுவனங்களுக்கு அனுப்பி அங்குள்ள மக்கள் பயனடைய குறிப்பாக வசதி குறைந்தவர்கள் பயனடைய வழி சமைத்துள்ளனர். சுமார் மூவாயிரம் பவுண் (£ 3000) மொத்தமாக அனுப்பப் பட்டது.

1. திருப்பதியில் நவஜீவன் என்ற அறநிறுவனம் கண்பார்வை அற்றவர்களுக்குச் சிகிச்சை அளித்து வருகிறது. அந்த நிறுவனத்துக்குப் பணம் அனுப்பி, சிகிச்சை பெறப் பணவசதியற்ற பார்வைக் குறைபாடு உள்ளவர்கள் 50பேர் கண்பார்வை பெற அறிவொளி வளையச் சிறுவர் உதவி செய் துள்ளனர்.

2. கல்முனையில் நால்வர்கோட்டம் என்ற அமைப்பு ஒன்றைச் சைவ முன்னேற்றச் சங்கம் அமைத்து சுனாமியாற் பாதிக்கப்பட்ட 30 சிறுவர்களுக்கு உணவு, உடை, கல்வி வழங்கி வருகிறது. இந்த நால்வர் கோட்டத்திலுள்ள குழந்தைகளுக்கு அறிவொளி வளையச் சிறுவர்கள் படிப்புக்கான புத்தகங்கள், உடை ஆதியன பெற நிதியுதவி செய்தனர்.

3. வவுனியாவில் ORHAN (Organisation For The Rehabilitation Of The Handicap) என்ற அமைப்பிலுள்ள மனவளம் குறைந்த சிறுவர்களுக்கு அவர்கள் அத்தியாவசியத் தேவைகளைப் பெறும்வகையில் நிதி அனுப்பி உதவியுள்ளார்கள்.

அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.


## யோகா விஞ்ஞானமும் ஆரோக்கிய வாழ்வும்

உடற்பருமன், இடுப்புவலி, நீரிழிவு, மூட்டு வலி, மன அழுத்தம், தொய்வு, இரத்த அழுத்தம், மலச்சிக்கல், கபாலவலி, மூலநோய் போன்ற வியாதிகளால் அவதிப்படுகின்றீர்களா?
யோகாசனப்பயிற்சி மூலம் பலர் இவ்வியாதிகளிலிருந்து குணமடைந்து ஆரோக்கிய வாழ்க்கை வாழுகின்றார்கள். எல்லா வயதினரும் இந்த யோகக் கலையைப் பயின்று நோயற்ற வாழ்வு என்ற குறைவற்ற செல்வம் பெற

தொடர்புகளுக்கு: **07830 374780 / 07730 313379.**

**வருமுன் காப்போம்!**

**SMS(U.K), 2 Salisbury Road, Manor Park, London, E12 6AB | Tel: 0208 514 4732**

# படித்தவர் பகன்றவை

கலசம் நல்ல விடயங்களைத் தாங்கி வருகிறது; வரவேற்கப்படவேண்டிய விடயம். ஆனால் சிறுவர்களுக்கு உரியதாக அதிக பக்கங்களை ஒதுக்கினால் நன்றாக இருக்கும்.

**- திரு ரவி வால்தம்ஸ்ரோ**

சென்ற இதழிலே ஓதுவாமூர்த்தி தருமபுரம் சுவாமிநாதன் அவர்களின் மறைவைக் குறிப்பிட்டிருந்தீர்கள். அதிலே அறுபதுகளில் அவர் யாழ்ப்பாணத்தில் பண்ணிசை பயிற்றுவித்ததாக எழுதியுள்ளீர்கள். அப்போது ஈழத்தில் பண்ணிசை பயிற்றுவித்தவர் அவரல்ல, இன்னொரு ஓதுவாமூர்த்தி திரு PAS ராஜசேரன் அவர்கள்.

**- திரு தண்டபாணி லூயிஷாம்**

தேவாரங்களைப் பிரசுரிக்கின்றீர்கள். அதை ஆங்கிலத்திலே எழுதி கருத்தையும் எழுதினால் சிறுவர்களும் படிக்கலாம் என்று நினைக்கிறேன்.

**- திருமதி பவானி என்பீல்ட்**

ஆன்மிகம், அருணகிரியார் உவமைகள் என்று பல பயனுள்ள, படித்து மகிழ கட்டுரைகள் வந்தன. தொடர்ந்து நல்லவற்றை பிரசுரியுங்கள்

**- திரு மணிவாசகன் லூயிஷாம்**

தவறுகளைச் சுட்டிக்காட்டுவது ஒரு பத்திரிகையின் தார்மிகப் பொறுப்பு. பத்திரிகைத் தருமத்தைப் பேணும் அதேசமயம் துணிந்து கருத்தையும் பண்புடன் எடுத்துச் சொன்னது நல்லது. சமய நிறுவனங்களிலுள்ள பிழைகள் திருத்தப்படவேண்டியவை.

**- திரு சம்பந்தன் ஈஸ்ட்ஹாம்**

**If you would like your Kalasam to be sent to your home address, please fill in the form below and send it to us with your payment.**

## கலசம்
## KALASAM

இலவச காலாண்டிதழ்

### கலசம் உங்கள் வீடுதேடி வரவேண்டுமா?

இப்படிவத்தை நிரப்பி அனுப்புங்கள்!

பெயர் :.......................................................................................

முகவரி :....................................................................................

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

Donation: £..................

Postage: £..................

Total £.

Kalasam
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

kalasam@hotmail.com

Postage and admin : £10 (U.K/Europe) : £ 20 (Rest of the world) (இரு வருடங்களுக்கு)



திநேஸ்
ஜுவலர்ஸ்
பழைய தங்கத்திற்கு அதிக விலை வேண்டுமா
ஞாபகத்தில் வைத்திருங்கள்
மலிவு விலையில் தரமான தங்க நகைகள் வேண்டுமா
லூயிஷேத்தில்......
திருமண வைபவத்திற்கு தேவையான பொருள்கள், பட்டு சேலைகள்,
தலைப்பாகை, சிறுவர்களுக்கான அனைத்துப் பொருள்களையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
100 பவுணுக்கு மேல் சாறி கொள்வனவு செய்தால்
சாறி பிளவுஸ் இலவசமாய் தைத்துத்தரப்படும்.
THINESH JEWELLERS & TEXTILES
276 Lewisham High Street, Lewisham, London SE13 6JZ
Tel: 020 8613 9569 | Fax : 020 8690 4661
www.thinesh-jt.com
வாகனத்தரிப்பிடம் உண்டு

COMMERCIAL & INDUSTRIAL GUARDING
CALL NOW FOR A FREE SURVEY AND QUOTATION

SECURITY GUARD WANTED

* RETAIL
* CONSTRUCTION
* 24 HOUR RADIO PATROLS
* KEY HOLDING
* ACCESS CONTROL
* CCTV

# CHARTER SECURITY

A PROFESSIONAL SERVICE EVERY TIME

1ST FLOOR
CAMBRIDGE ROAD
BARKING
ESSEX
1G11 8NR

TEL: 020 8507 7717
FAX: 020 8507 7702

# மனித வாழ்வில் ஜோதிடம் மாபெரும் பொக்கிஷம்

**கலாநிதி. ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள்**

**கும்பலக்னம்:**



லக்ன வரிசையில், பதினொராவது லக்னமாக அமைகின்ற இந்த லக்னத்தின் அதிபதியும் சனீச்சரனே. ஜோதிட நிலையிலே ஆயுட்காரகன், ஜீவன, ரோககாரகன் எனப் போற்றப்படுகின்றவர். பொதுவாக இந்த லக்னத்தவர்களுக்கு லக்ன, விரயஸ்தான ஆதிபத்தியத்தைப் பெறுகின்ற சனீச்சரன் அதிஷ்டங்களைக் கொடுப்பவராக அமை கின்றார். இந்த லக்னத்தவருக்கு குருபகவான் வாக்குஸ்தான அதிபதியாக அமைகின்றார். கல்வி நிலையிலே நல்ல அநுகூலங்களைப் பெறும் வாய்ப்பு இந்த லக்னகாரருக்கு உண்டு. அதுமட்டுமன்றி சுகபோகக்காரன் எனப் போற்றப்படுகின்ற சுக்கிரன் இந்த லக்னத் தவர்களுக்கு பாக்கியஸ்தான அதிபதியாக அமையப் பெற்றால் 'அதிஷ்டக்காரர்' எனும் நிலையை இவர்கள் அடிக்கடி பெறுவார்கள். வாக்குஸ்தான அதிபதியாக அமைகின்ற குருபகவானே லாபஸ்தான ஆதிபத்தியமும் பெறுவது கல்வியினூடாகத் தொழிலும் அதற்குரிய லாபகரமான நிலைகளும் இவர்களுக்கு ஸ்திரமாக அமையும் பலன் உண்டு. எடுக்கும் முயற்சிகளை நிதானமாகச் செயற்படுத்துகின்ற ஆற்றல் உடையவர்கள். எல்லா வகையிலும் ஆளுமைத்திறன் உடையவர்கள். எதிர்பாராத வகை உயர்வுகளும் அந்தஸ்துகளும் இவர்களுக்கு அமையும் நிலையுண்டு. சனி, சுக்கிரன், புதன் கிரஹங்கள் இவர்களுக்கு யோகமான நிலையைக் கொடுக்கும். மேற்படி கிரஹங்கள் கிரஹநிலையில் கேந்திர நிலை பெற்றோ, ஆட்சி உச்சம் பெற்றோ அமைந்திருப்பின் மிகச் சிறப்பான பலன்களை மஹாதெசைக் காலங்களில் கொடுக்கின்ற நிலையுண்டு. இவர்களின் தொழில் ஸ்தான அதிபதியாகச் செவ்வாய் அமைவது தொழில் மூலமாக நிலம் வாங்கிடவும் பூர்விக பண்டங்கள், சொத்துக்கள் சேரவும் அதிகமான பலனுண்டு. எப்போதுமே நியாயபூர்வமாகச் செயற்படுகின்ற குண இயல்பை இவர்கள் கொண்டிருப்பார்கள். எல்லோருக்கும் தாராளமாக உதவி புரியும் மனநிலை இருக்கும். குடும்ப உறவுகளை அரவணைத்துச் செயற்படுகிற ஆற்றல் இவர்களிடம் அதிகமாக அமைந்திருக்கும். நிறைந்த தெய்வபக்தி உடையவர்களாக இவர்கள் இருப்பார்கள். எல்லா விடயங்களிலும் ஆர்வமாகச் செயற்படுகின்ற குண இயல்பு, அடிக்கடி வாழ்வில் ஏற்ற இறக்கங்களைச் சந்திக்கின்ற நிலையிருக்கும். தற்புகழ்ச்சி இவர்களிடம் சற்று அதிகமாக இருக்கும். மனநிலையில் அடிக்கடி ஏதேனும் சிந்தனை செய்துகொண்டே இருப்பார்கள். எந்தக் காரியத்திலும் உடனடியாக வெற்றிபெறும் தன்மை குறைவாகவே இருக்கும். இவர்களின் ஜாதக கிரஹ நிலையிலே சுக்கிரன், செவ்வாய் சேர்க்கைபெற்று அமைந்திருந்தால் சிறப்பான பிரபலயோகத்தைக் கொடுக்கும். இவர்களின் களத்திரதானத்தில் 'சூரியன்' அமைவது குடும்பவாழ்க்கையில் சற்று போராட்டமான நிலைகள் அதிகமாக அமையும். உரிய காலத்தில் சுக்கிர மஹாதெசை அமைகின்ற நிலையை இவர்கள் பெற்றால், மிகவும்


உயர்வான நிலையில் வாழ்க்கையில் எல்லா வளங்களும் பெறக்கூடிய பலன் உண்டு. விநாயகப்பெருமான் வழிபாடு இவர்களுக்கு உகந்ததாக அமையும். 'நீலக்கல்' அதிஷ்ட மோதிரக்கல்லாய் அமைகின்றது. நீலவர்ண ஆடைகள் அணிவதும் அநுகூலமான நிலையைக் கொடுக்கும். சுபகிரஹங்களின் பார்வை பெறும் பட்சத்தில் 80 ஆண்டுகள் வரை வாழும் நிலையைப் பெறுவார்கள்.

**மீனலக்னம்:**

லக்ன வரிசையில் பன்னிரண்டாவது லக்னமாக



மீனம் அமைகின்றது. இந்த லக்னத்தின் அதிபதி 'குருபகவான்'. ஜாதகக் கிரஹநிலையிலே புத்திகாரகன், ஞானகாரகன், புத்தியுக்திகாரகன் எனப் போற்றப்படுகின்றார். ஞானபொக் கிஷமான அறிவைத் தருபவர் குரு. எனவே இந்த லக்னகாரருக்கு லக்ன அதிபதியாகக் குருவும் சுகஸ்தான அதிபதியாக வித்தியா காரகன் எனப்படும் புதனும் அமையப்பெற்று இருப்பதனால் மிகவும் சிறப்பான உயர்கல்வி அமையக்கூடிய பலன் உண்டு. எதிர்பார்க்கின்ற கல்வி நிலையில் நல்ல மேன்மை பெறலாம். இந்த லக்னத்தில் உள்ளவர்கள் எதிர்பார்ப் புக்களை எளிதாகவே அடையக்கூடிய வல்லமை உடையவர்கள். சமூகத்திலே சிறந்த கௌரவமும் புகழும் கொண்டிருப்பார்கள். எந்த விடயத்தையும் ஆளுமையுடன் செய்யக்கூடிய ஆற்றல் ஒருங்கே பெற்றவர்கள். இவர்களுக்கு ஜன்மலக்ன அதிபதியான குருபகவானே தொழில் ஸ்தான அதிபதியாகவும் அமைவது நல்ல ஸ்திரமான தொழில் யோகத்தை கொடுக்கும். ஓய்வுகாலம் வரை தொழிலில் உயர்ந்த நிலையில் இருக்கும் அநுகூலம் உண்டு. பொதுவாக சந்திரன், செவ்வாய் கிரஹங்கள் யோககாரர். குருவும் சிறப்பான யோகத்தைக் கொடுப்பார். கிரஹநிலையில் மேற்கூறிய கிரஹம் ஆட்சி உச்சம்பெற்று அமைந்திருப்பின் சிறப்பான வெற்றிகள் யோகங்கள் அமையும் நிலையுண்டு. அதேபோல் இக் கிரஹங்களின் மஹாதெசைக் காலங்களில் மேன்மையான பலன்கள், எதிர்பார்புக்கள் நிறைவேறும் தருணங்கள் என்பன அமைந்திருக்கும். மீன லக்னகாரர்கள் மிகவும் அழகும் வசீகரமும் உடையவர்கள். பார்த்தவுடனேயே மற்றவர்களைக் கவரும் கவர்ச்சி கொண்டவர்கள். எந்த இடத்திலே இருந்தாலும் பிரகாசமாகத் தெரிகின்ற தன்மையுடையவர்கள். இவர்களுக்கு களத்திர காரகனாக புதன் அமைவது ஏற்ற வாழ்க்கைத் துணையை அமைவிக்கும். குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சிகரமாகவும் குதூகலமாவும் அமையும். வாழ்க்கையில் நினைத்த விடயங்களைச் சாதிக்கக்கூடிய வல்லமை இயற்கையாகவே இவர்களுக்கு அமையும். எல்லோருக்கும் உதவும் குணமும் அனைவரையும் அநுசரித்து செயற்படும் தன்மையும் இவர்களிடம் உண்டு. பெரியோர்களை மதித்து நடக்கும் பண்பு கொண்டவர்கள். நிறைந்த தெய்வபக்தியும் இருக்கும். தட்சணாமூர்த்தி வழிபாடு சிறப்பானதாக அமையும். 'புஷ்பராகம்' இவர்களது அதிஷ்ட மோதிரக்கல்லாக அமைகின்றது. மஞ்சள் நிற வஸ்திரம் இவர்களுக்கு சிறப்பும் மேன்மையும் தரும். சுபகிரஹங்கள் பார்வை அமையும் நிலையில் 90 ஆண்டு வாழும் பேறு பெறுவார்கள்.


SATASH
COMMUNITY CARE

# மாயா — ஹரிதுவாரம் - (பயணக் கட்டுரை)

## சாவகச்சேரியூர் டாக்டர். க.கதிர்காமநாதன்

**முத்தித்தலங்கள் *(4)***



இமயமலை என்றவுடன் ஒரு வித பயபக்தி புனித உணர்ச்சி எழும். அதிலும் இமயமலை செல்லும் முன்னர் ஹரிதுவாரம் முதலில் செல்லல் வேண்டும் என அறிந்தவுடன் மனம் குளிர்ந்தது. எமது மகன், "இமயமலை சென்றால் உங்களை கடத்தி சென்று விடுவார்கள்" என்று எச்சரித்தார். 2002 ஆண்டு கடத்தல் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இதனால் எமக்கு இப்பயணம் ஒரு துணிகரமானதாக இருந்தது.

விமான மூலமாக டெல்லியை அடைந்தோம். வெளிவந்தவுடன் எமது பெயர் கொண்ட அட்டையை பிடித்தபடி பிரயாண பிரதிநிதி (Agent) நின்றார். தன்னை அறிமுகப்படுத்தி பின்னர் சாரதி சிங் அவர்களை கூப்பிட்டு அறிமுகம் செய்தார். தமிழ்நாடு போல் இங்கு பேசக் கூட முடியாது என்றாலும் ஆங்கிலம் தெரிந்த இவரின் கையிலேதான் மனைவியும் நானும் என எண்ணினேன்.

மதிய நேரத்தில் டெல்லியிலிருந்து இமயமலை செல்வதற்கேற்க மோட்டோர் வாகனத்தில் புறப்பட்டோம். தொடங்கும்போது அங்கு சோனாவாரியான (பெரும்) மழை. தெருவெங்கும் வெள்ளம் தண்ணீர் ஆறாக ஓடிக்கொண்டிருந்தது. மனைவியார் வழமை போல பெருமூச்சுடன் ஒன்றும் பார்க்க முடியாது என அபாய அறிவிப்பு விடுத்தார். டெல்லியிலிருந்து ஹரிதுவாரம் சுமார் 150மைல் தூரத்திலுள்ளது. நடு தூரத்தில் Cheetal Grand என்ற சிற்றுண்டிசாலை உளது. அநுபவமுள்ள வண்டிச்சாரதி இங்கு நிற்பாட்டினார். அப்போது மழை சற்றே தூறிக்கொண்டிருந்தது. இச் சிற்றுண்டிச்சாலையில் சகல விதமான உணவுப் பண்டங்களும் துரிதமாகவும் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும். ஏகப்பட்ட சனக்கூட்டம். பிள்ளைகள் விளையாட இடமுண்டு. இருந்து இளைப்பாற பூங்காவுமுண்டு. இங்கு சிற்றுண்டி சாப்பிடுவது ஒரு மறக்க முடியாத நினைவாகும். நாம் வடை, தேநீர், தோசை சாப்பிட்டோம். திரும்பும்போதும் இங்கு வந்து போகத் தவறவில்லை.

ஹரிதுவாரத்தை மாலை 6மணி போல் அடைந்தோம். இது "உத்தரகாண்ட்" என்ற பிரதேசத்தில் உளது. இங்கு 80% இமயமலை பிரதேசம் தான். அடைய முன்பே கங்கை நதியின் இரைச்சல் கேட்டது. இம்முத்தி தலத்தை அடைந்து கால்வைத்தவுடன் இது பேரிரைச்சலாக மாறியது. மழை பெய்ததால் நிலம் சேறும் சகதியுமாக இருந்தது. மெல்ல மெல்ல நடந்து கோயிலை அடைந்தோம்.

"த்வாரம்" என்பது வாயில் ஆகும். ஆங்கிலத்தில் The Gate way to the Heaven எனக் கூறி Hare=god. Dwar=gate-har=dwar என முடிப்பர். இமயம் சொர்க்கம் என்றால் ஹரிதுவாரம் சொர்க்க வாசலாக அமைகிறது. முற்காலத்தில் தற்போது இருக்கும் நவீன போக்குவரத்து சாலைகள் இருக்கவில்லை. இதனால் இமயமலையில் இருக்கும் கேதாரம், பத்ரிநாத்து, கங்கோத்திரி, யமுனோத்திரி ஆகிய புண்ணிய இடங்கள் அடைய முடியாதோர் இங்கு நின்று இமயத்தை தரிசிப்பர். சென்றோரில் அநேகர் திரும்பி வந்ததில்லை.

கோயிலுக்கு செல்லுமுன் நாங்கள் அங்கு மக்கள் நீராடுவதை கண்ணுற்றோம். எமக்கு பாவங்களை தீர்க்கும் கங்கையில் நீராட ஆவலாகவிருந்தது. இரைச்சலோடும் வெகுவேகமாகவும் அகலமாகவும் ஆழமாகவும் ஓடும் கங்கையை பார்த்துப் பரவசமடைந்தாலும் பயந்தோம். கரையில் குளிர் காற்றும் அடித்தது. முதியோர்களும் மற்றவர்களும் சங்கிலியைப் பிடித்து நீராடுவதை கண்டு நாமும் சென்றோம். சங்கிலியை பிடித்து மெதுமெதுவாக படிகள் மூலம் இறங்கினோம். ஒரு கையில் சங்கிலி மறு கையில் மனைவியார். இருவரும் முதல் மூன்று முறை கரையில் நின்று ஒருமித்து நீரினுள் முழுகினோம். ஐஸ் போல் கங்கை குளிர்ந்தாள். இக்குளிர்ச்சி எமது கிலேசத்தையும் பிரயாண களைப்பையும் தீர்த்தது.

கங்கை நதி இமயத்திலிருந்து இறங்கி இங்குள்ள மண்ணில் பிரவேசிக்கிறது. இங்கு நதி இரண்டாக பிரிவதால் நடுவில் தீவு போன்ற பிரதேசம் உளது. இதில் கங்கா மாதாவிற்கு கோயிலும் ஹரிகிபைரி என்ற நீராடும் இடமும் இருக்கிறது. கங்கை நதி சம வெளியை அடைவதால் கங்காத்வாரம் எனவும் ஹரிதுவாரத்தை அழைப்பர். இதைவிட மாயா மாயாபுரி கபிலா தேவபூமி எனவும் கூறுவர். ஹரிதுவாரம் என்ற பெயரே நிலைத்து நிற்கிறது.

நீராடிய பின்னர் முதலில் கங்கை கரையில் கங்கையை பார்த்தபடி வீற்றிருக்கும் பிள்ளையாரை வணங்கினோம். பிள்ளையார் சிவப்பு ஊதா நிறத்தில் வலஞ்சுழி விநாயகராக காட்சியளிக்கிறார். இவரது தும்பிக்கை வலப்பக்கம் சுழித்து இருப்பதால் வலஞ்சுழி என கூறுவர்.

பின்னர் கங்கா மாதா கோயில் சென்று வழிபட்டோம். கங்கை துர்க்கை அம்சமுடயது. பராசக்தியின் வடிவத்தில் ஒன்று துர்க்கா என குறிப்பிடல் வேண்டும். இமயமலையில் கோமுக் எனும் இடத்தில் பகீரதியாக பிறந்து பின்னர் கங்கையாக மாறி மாயாவை அடைகிறாள்.

மாலை 7 மணி போல் கங்கா மாதாவிற்கு மங்கள ஆரத்தி தீபாராதனை காட்டினர். “ஜயஜய கங்கே ஜய மாதா, ஜய கங்கே” என்று கோஷமிட்டு ஒருமித்து பாடினர். இதை மணியோசையுடனும், மேளதாளத்துடனும் ஒலி பெருக்கியில் கேட்க ஒரு வித பக்தி பரவசம் மேலோங்கும். விஷ்ணுவின் பாதம் நீராடும் கங்கையில் இருப்பதாக ஐதிகம். இதனால் தீபாராதனையை பாதத்தில் காண்பிப்பதாக முதல் கீழே காட்டி பின் மேலே உயரமாக காட்டுவர். இவற்றை பார்க்க மக்கள் கூட்டம் கும்பல் கும்பலாக நிறைந்திருந்தது. ஆர்த்தி காட்டும் போது சிலர் இலை மடிப்பில் பூக்களோடு தீபம் ஏற்றி கங்கா மாதாவை வணங்கி பயபக்தியுடன் மிதக்கவிடுவர். பல தீபங்கள் மிதக்கும் காட்சி பரவசமூட்டும். நாமும் அவ்வாறே செய்தோம்.

இங்கு தம்பதிகள் இரு கைகளையும் ஒன்று சேரப் பிடித்து சங்கற்பம் செய்வர். நாமும் செய்தோம். புனித அநுபவமாக இருந்தது. 12 வருடங்களுக்கு ஒரு முறை சித்திரை மாதத்தில் வரும் கும்பமேளா வெகு விசேடமாகும். கும்ப இராசியில் குருபகவான் பிரவேசிக்கும் நாளே கும்பமேளாவாகும். இந்தியா மாத்திரமின்றி வேறு இடங்களிலுமிருந்து மக்கள் சென்று கூடுவர். 1954ஆம் ஆண்டு நடந்த கும்பமேளாவில் சனநெருக்கடியால் 800பேர் உயிரிழந்தனர். இத்தகைய சம்பவங்கள் நடப்பதுண்டு. இதே போன்று 6 வருடத்திற்கு ஒருமுறை வரும் அர்த்த கும்பமேளாவும் கொண்டாடப்படுகிறது. வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆர்த்தியும் மேன்மையானது.

டெல்லியிலிருந்து 266 கி.மீ இல் இருக்கும் இவ்விடத்தை ரெயில் மூலம் சென்றடையலாம். புகையிரத நிலையத்திலிருந்து ஒரு கி.மீ தூரத்தில் இம் முத்தி தலம் இருக்கிறது.

**ரிஷிகேசம்:-**

அன்றிரவு ரிஷிகேசத்தில் நடராஜ் எனும் ஹோட்டலில் தங்கி, மறுநாள் காலை புனித ரிஷிகேசம் சென்றோம். இவ்விடம் ஹரி துவாரத்திலிருந்து 25 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளது. ஜீவன் முத்தி பெறச் செய்யும் யோகாசனத்திற்கு தலைமையான இடம் இதுவாகும். நாங்கள் காலையில் எழுந்து முதலில் பார்க்கும் போது மூன்று பக்கத்திலும் மலைகளால் சூழப்பட்டிருக்கும் இவ்விடம் மிக மிக ரம்மியமாக தோற்றமளித்தது. இயற்கை அன்னையின் அரவணைப்பை வெகு நன்றாகவே பெற்றிருக்கிறது.

நாங்கள் ஒரு வழிகாட்டுபவரை கூட்டிக் கொண்டுதான் ரிஷிகேசம் பார்க்க சென்றோம். முதலில் இலட்சுமன்யுவர் எனும் பாலத்தின் மேல் சென்றோம். இப்பாலம் 60 அடி நீளமும் 6 அடி அகலமும் கொண்டதாகும். இப்பாலத்தில் மக்கள் நடந்து செல்வர். சிலர் சைக்கிளிலோ ஸ்கூட்டரிலோ செல்வதைக் கண்டோம். ஆங்காங்கே பிச்சைக்காரர் இருந்து பிச்சை எடுத்துக் கொண்டிருந்தனர். பாலத்தின் கீழே கங்கைநதி குமுறிக்கொண்டு இரைந்து ஓடிக்கொண்டிருந்தது. கரையை அடைந்தவுடன் முதல் தென்பட்டது ஒரு சிவன் கோயில்.

நாங்கள் சென்ற சமயம் பூசைக்கு ஆயத்தங்கள் செய்தனர். லிங்க வடிவில் இருந்த அபிஷேகப் பிரியரான சிவனுக்கு கங்கை நீரால் நீராட்டினர். பின்னர் இலைகள் பூக்களால் பூசித்து தூப தீபம் காட்டினர். சில நிமிடங்கள் தான். ஆனால் எங்களுக்கு பிரதோஷ நாளாகிய அன்று ஒரு கொடையாகவிருந்தது.

இதன் பின்னர் இக்கோயிலுக்கு சமீபத்திலுள்ள கோயிலில் வால்மீகி வசிட்டர் விசுவாமித்திரர் அகத்தியர் ஆதிசங்கரர் ஆகியோரின் திரு உருவங்களை வணங்கினோம்.

இராமர் கோயில் பெரிதாகவுள்ளது. இங்கு வலம்புரிச் சங்கு உருத்திராட்சமாலை வாங்கினோம். ரிஷிகேசத்திலுள்ள மலைகளில் இருக்கும் மரங்களில் உருத்திராட்சம் கிடைக்கிறது. பெண்களுக்கு மாங்கல்யம் எப்படியோ அதே போன்று சிவனடியார்க்கு உருத்திராட்சம் ஆகும்.

ரிஷிகேசத்தில் ஞானிகள் முனிவர்கள் சித்தர்களுக்கு ஆன்மிகவாதிகளுக்கு குறைவேயில்லை. கங்கையை பார்த்தபடி அமைந்திருக்கும் சிவானந்த ஆசிரமம் மிக பிரசித்தி பெற்றது. தமிழ் நாட்டில் குப்புசாமி என்ற பெயரில் பிறந்து சிறந்த டாக்டரானவர் மலேசியாவில் பணிபுரிந்தார். பின்னர் இந்தியா திரும்பி 1924ஆம் ஆண்டில் சிவானந்த சரஸ்வதி எனப் பெயர் பெற்றார். இன்றும் இவருடைய பெயரை விளக்க இந்த ஆசிரமம் நற்பணி செய்து வருகிறது.

இந்துக்கள் மட்டுமன்றி வேறு சமயத்தவரும் போற்றும் ரிஷிகேசத்தை ஹரி துவாரம் செல்லும் யாவரும் சென்று பார்த்து வணங்கிட மனநிறைவடைவர்.

"நதியில் சிறந்தது கங்கை"

---

***திருவாரூர் - பிறக்க முத்தி, சிதம்பரம் - வழிபட முத்தி, காசி - இறக்க முத்தி, திருவண்ணாமலை - நினைக்க முத்தி என்பர் ஆன்றோர்***

# கண்ணனும் தாத்தாவும்

-முத்து-

அன்று தீபாவளி. சனிக்கிழமை வந்தபடியால் கண்ணனும் தாத்தாவும் கோயிலுக்குச் சென்று வீடு திரும்புகின்றனர். கண்ணன் அம்மா தனக்கு வாங்கிக் கொடுத்த புது உடையை அணிந்து கொண்டிருந்தான். அது அவனுக்குப் பிடித்தமான நீலநிறம். தனது புது உடையைப் பார்த்து ரசித்தபடியே தாத்தாவைக் கேட்கிறான்;

கண்ணன் : தாத்தா! நான் போட்டிருக்கும் சட்டை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா? அழகான நிறம் இல்லையா தாத்தா?

தாத்தா : ஆமாம் கண்ணா! இது எனக்கு மிகவும் பிடித்த நிறம். மேகத்தின் நீல நிறம். கடவுளாகிய கண்ணனின் நிறமும் நீலம் தான். கண்ணனைப் பற்றிய பாடல்கள் எல்லாம் அவனுடைய அழகிய நிறத்தைப் பலவிதமாக வர்ணிக்கும். நீலம் என்பது வடமொழியில் கருமையைக் குறிக்கும்.

கண்ணன் : எங்கே தாத்தா ஒரு பாடல் சொல்லுங்கோ! கேட்போம்.

தாத்தா : ஆண்டாள் பாடிய திருப்பாவையில் முதலாவது பாடலில் ஒரு வரியைச் சொல்கிறேன் கேள். "கார்மேனிச் செங்கண் கதிமதியம் போல் முகத்தான்" என்று ஆண்டாள் கண்ணனது அழகைப் பற்றிப் பாடுகிறாள்.

கண்ணன் : பாட்டின் பொருளையும் சொல்லுங்கோ தாத்தா!

தாத்தா : கார்மேனி என்றால் முகில்போலக் கருமையானது. கண்கள் சிவந்த நிறமானவை. முகம் சூரியனைப் போல் மிகவும் பிரகாசமானது, என்பது தான் இதன் அர்த்தமாகும்.

கண்ணன் : தாத்தா! எனக்கும் நான் முன்பு கண்ணனைப் பற்றிப் படித்த பாடல் ஒன்று ஞாபகம் வருகிறது சொல்கிறேன் கேளுங்கள்.

தாத்தா : நல்லது பாடிக்காட்டு பார்ப்போம்!

கண்ணன் : கண்ணன் எங்கள் கண்ணனாம் கார்மேக வர்ணனாம். இந்தப் பாடலிலும் கார்மேக வர்ணன் என்று வருகிறது. இப்போ எனக்குப் போன முறை சொல்லித் தந்த உவமையும் நினைவுக்கு வருகிறது.

தாத்தா : கெட்டிக்காரன்! படித்தவற்றை மறக்காது ஞாபகம் வைத்திருக்கிறாய். இன்றைக்கு என்னத்தைப் பற்றிப் படிக்கலாம்? சொல் பார்ப்போம்.

கண்ணன் : இன்றைக்கு ஒரு தேவாரமும் ஒரு திருக்குறளும் சொல்லித் தாங்கோ தாத்தா! வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு பிறகு படிப்போம். அம்மா இன்றைக்கு எனக்குப் பிடித்த சாப்பாடெல்லாம் சமைத்து வைத்திருப்பா. நீங்கள் தீபாவளிக்கு ஊரில் என்னவெல்லாம் செய்வீர்கள்.?

தாத்தா : ஊரில் தீபாவளிக்கு எல்லோருக்கும் விடுமுறைதான். அதனால் வெளியூரில் வேலைசெய்பவர்கள் எல்லாம் தம் சொந்த ஊருக்குப் போய் உறவினர்களுடன் கூட இருந்து தீபாவளித் திருநாளை மிகக் கோலாகலமாகக் கொண்டாடுவார்கள். எல்லோரும் புது உடைகள் தம் குடும்பத்திற்கு மட்டுமன்றிச்

சொந்தக்காரர்களுக்கும் வாங்கிக் கொடுப்பார். எல்லோரும் காலையில் எழுந்து குளித்துப் புதிய ஆடைகளை உடுத்திக் கோயில்களுக்குச் செல்வார்கள். பின்பு நண்பர்களின் வீடுகளுக்கோ உறவினர் வீட்டிற்கோ செல்வார்கள். உங்களைப் போன்ற சிறுபிள்ளைகள் தங்கள் புது உடுப்புகளை காட்டி மகிழ அயல் வீடுகளுக்குச் செல்வார்கள்.

கண்ணன் : அப்போ தீபாவளி என்றால் உங்களுக்கு நாள் முழுவதும் ஒரே கொண்டாட்டம் தான் என்று சொல்லுங்கோ. இந்த நாட்டில் ஊர் மாதிரி எங்கள் பண்டிகைகளை நன்றாகக் கொண்டாட முடியாது. இல்லையா தாத்தா? இந்த வருடம் சனிக்கிழமை தீபாவளி வந்ததால் பரவாயில்லை. இல்லாவிட்டால் அம்மா அப்பாமார் வேலைக்குப் போய்விடுவார்கள். பிள்ளைகள் பள்ளிக்கும் போய்விடுவார்கள். சில பள்ளிகள் தீபாவளிக்கென்று ஒரு நாள் விடுமுறை விடுவார்கள். இருந்தாலும் ஊர்மாதிரி வரமாட்டாது. என்ன தாத்தா?

தாத்தா : ஆமாம் கண்ணா! நீ சொல்வது சரிதான் எங்கள் நாட்டில் எங்கள் பண்டிகைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். நாங்கள் இன்னொருவரின் நாட்டில் வாழ்கிறோம். அவர்கள் தங்கள் பண்டிகைகளுக்குத்தான் முக்கியத்துவம் கொடுப்பார்கள். அதன்படி கிறிஸ்துவ பண்டிகைகளான நத்தார் (Christmas) பெரியவெள்ளி (Good Friday) போன்றவற்றிற்கு நாடுமுழுவதும் விடுமுறை விடுகிறார்கள். அந்த விடுமுறை நாள்களில் கிறிஸ்துவர் அல்லாதவர்கள் எல்லோரும் உறவினரையும் நண்பர்களையும் சந்தித்து கூடி மகிழ்கிறார்கள். எங்கள் பண்டிகைகளை நாங்கள் ஊரில் கொண்டாடுவது போல் இங்கே கொண்டாட முடியாது. இது எப்படி என்று சொல்கிறேன் கேள் கண்ணா! நீ உனது நண்பர்களின் வீடுகளுக்குப் போய் விளையாடுவாய். சில நாள்களில் அவர்கள் வீடுகளில் தங்கிவிட்டு அடுத்த நாள் வருவாய். இல்லையா?

கண்ணன் : ஆமாம் தாத்தா! அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

தாத்தா : நீ நண்பர்களுடன் சந்தோஷமாக விளையாடுவாய். அவர்களின் பெற்றோர்கள் உன்னை நன்றாக உபசரிப்பார்கள். இருந்தாலும் அவர்கள் வீடு உன் வீடு போல் இருக்குமா? அங்கே உனது வீட்டில் செய்வதெல்லாம் செய்ய முடியுமா?

கண்ணன் : இல்லை தாத்தா. நான் அங்கே குழப்படி செய்யாது கவனமாக இருப்பேன். அவர்களுக்கு பிடிக்காத எதையுமே செய்ய மாட்டேன்.

தாத்தா : சொந்த நாட்டை விட்டுப் பிறநாட்டில் வந்து வாழ்வதும் அதைப்போலத்தான் கண்ணா! இன்னுமொரு உதாரணம் சொல்கிறேன் கேள்!

கண்ணன் : சொல்லுங்கோ தாத்தா

தாத்தா : உனது அம்மாவைப்போல் உன்னிடம் வேறுயாராவது அன்பாக இருப்பார்களா? அல்லது உன் அம்மாவைவிட யார் மீதும் அதிக அன்புண்டா?

கண்ணன் : எனக்கு என் அம்மாவில் தான் கொள்ளை ஆசை. அம்மாவைப் போல் யாரும் என்மீது அன்பாக இருக்கவே மாட்டார்கள் தாத்தா!

தாத்தா : அதனாலேதான் சொந்த நாட்டைத் தாய்நாடு என்கிறார்கள்.

கண்ணன் : அப்போ தாய் நாட்டிற்கு ஒப்பாக எந்தப் பிற நாடும் வரமாட்டாது என்கிறீர்கள் அப்படித்தானே தாத்தா?

தாத்தா : ஆமாம் கண்ணா! வா இப்போ சாப்பிடுவோம். சாப்பிட்டு முடிந்தவுடன் தேவாரமும் திருக்குறளும் படிப்போம்.

(கண்ணனும் தாத்தாவும் வீட்டில் மற்றவர்களுடன் அம்மாவின் தீபாவளிப் பண்டிகைக்காக விசேடமாகச் சமைத்த உணவு வகைகளை உண்டு மகிழ்கின்றார்கள். பின்பு கண்ணன் தாத்தாவின் திருக்குறளையும் தேவாரத்திரட்டையும் எடுத்துக் கொண்டு வருகிறான்)

கண்ணன் : இந்தாருங்கோ தாத்தா திருக்குறளும் தேவாரத்திரட்டும், முதலில் திருக்குறளைப் படிப்போம்.

தாத்தா : சரி! எந்த அதிகாரத்திலிருந்து குறள் படிக்கப்போகிறாய்.

கண்ணன் : முதலாம் அதிகாரத்தில் முதலாவது குறள் முன்பே படித்து விட்டோம். அந்த அதிகாரத்தில் இன்னும் ஒரு குறள் படிப்போமா?

தாத்தா : சரி! முதலாவது அதிகாரத்தில் ஏழாவது குறளைச் சொல் பார்ப்போம்.

கண்ணன் : தனக்குவமை இல்லாதான் தாள்சேந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

தாத்தா : சரி உனக்கு ஏதாவது கருத்து விளங்கியுள்ளதா?

கண்ணன் : நீங்கள் முன்பு சொல்லித் தந்த உவமை என்ற சொல் இதிலும் வருகிறது தாத்தா.கடவுளுக்கு உவமையாக இந்த உலகில் எதையும் கூறமுடியாது என்று நினைக்கிறேன். சரியா தாத்தா?

தாத்தா : ஆமாம் கண்ணா! கடவுள் மனிதனின் சக்திக்கு அப்பாற்பட்டவன். கடவுள் இந்த உலகத்தைப் படைத்து காத்து அழிக்கவும் செய்கிறார். அந்தக் கடவுளை உலகில் உள்ள எந்தப் பொருளுக்கும் உவமையாகச் சொல்ல முடியாது. சூரிய வெளிச் சத்தை வேறு ஒன்றுடனும் ஒப்பிட்டுக் கூறமுடியாது.

கண்ணன் : ஆமாம் தாத்தா! சூரிய வெளிச்சத்திற்கு நிகராக உலகில் எந்த வெளிச்சமும் இல்லை. அதே போலக் கடவுளுக்கு நிகரானவர் எவரும் உலகில் இல்லை.

தாத்தா : ஆமாம் கண்ணா! இத்தகைய பெரிய சக்தி வாய்ந்த கடவுளை வணங்கி அவரது அருளைப் பெற்றால் தான் மக்களுடைய கவலைகள் தீரும். இல்லா விட்டால் எமது மனக்கவலைகளை மாற்றிக் கொள்ள முடியாது.

கண்ணன் : “கடவுளை நம்பினோர் கைவிடப்படார்” என்று நீங்கள் முன்பு சொல்லித்தந்தது நினைவுக்கு வருகிறது. இந்தக் குறளும் அதே கருத்தைத் தான் சொல்கிறது. என்ன தாத்தா?

தாத்தா : ஆமாம் கண்ணா! மனிதருக்குக் கடவுள் நம்பிக்கை வந்துவிட்டால் மற்றக் கவலைகள் யாவும் பறந்தோடிவிடும். ஆண்டவன் தன் பக்தர்களுக்காக எதையும் செய்வார். அடியார்களின் வரலாறுகளைப் படித்தால் உண்மை தெரியும். சரி இப்போ என்ன தேவாரம் படிக்கப் போகிறாய்?

கண்ணன் : திருஞானசம்பந்தர் முதன் முதலாகப் பாடிய தேவாரம் எது? அதனைச் சொல்லித் தாருங்கோ.

தாத்தா : திருஞானசம்பந்தர் மூன்று வயதுக் குழந்தையாக இருந்தபோதே முதலாவது தேவாரத்தைப் பாடினார்.

கண்ணன் : மூன்று வயதிலே எப்படிப் பாட முடியும்? மூன்று வயதிலேதான் குழந்தைகள் பேசவே தொடங்கும். திருஞானசம்பந்தரால் எப்படிப் பாட முடிந்தது.

தாத்தா : அது, கடவுளின் அருள் அவருக்குக் கிடைத்தபடியால் தான் அவர் தேவாரம் பாடினார். அவருடைய தந்தையார் சிவபாதவிருதயர் தன் மூன்று வயதுக் குழந்தையை குளக்கரையில் இருத்திவிட்டு நீராடுவதற்கு தண்ணீரில் இறங்கினார். அவர் தண்ணீரில் மூழ்கி எழுவதற்கு இடையில் குழந்தை தந்தையைக் காணவில்லையே என்று தவித்து "அம்மையே அப்பா" என்று அழுதது. குழந்தையின் அழுகைக் குரல் கேட்டதும் சிவன் பார்வதியுடன் அங்கே தோன்றினார். பார்வதியாரைக் குழந்தைக்குப் பாலூட்டுமாறு கூறினார். அம்மையார் பொற்கிண்ணத்திலே சம்பந்தருக்குப் பாலைக் கொடுத்துப் பருக வைத்தார். அம்மை அப்பராகிய இறைவனின் காட்சியால் குழந்தை அழுகையை நிறுத்தியது. அப்போது தந்தையார் அங்கே வந்தார். குழந்தையின் வாயில் பாலைக் கண்டார். யாரிடம் பால் வாங்கிக் குடித்தாய் என்று கோபமாக அதட்டினார். ஞானப்பால் குடித்த குழந்தையின் மனதில் சிவன் பார்வதியின் அழகிய தோற்றம் தெரிந்தது. இறைவனின் தோற்றத்தைப் பாடலாகப் பாடினார். இந்தத் தேவராத்தை என்னுடன் சேர்ந்து பாடு கண்ணா!

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந்து ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமா புரம்மேவிய பெம்மான் இவனன்றே!

கண்ணன் : நல்ல தேவாரம் தாத்தா. கருத்தை அடுத்தமுறை சொல்லித் தாங்கோ இப்போ நான் விளையாடப்போகிறேன்.

## நால்வர் கோட்டம் நிதி உதவி கோருகிறோம்

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள கல்முனை என்ற இடத்தில் சுனாமியாற் பாதிக்கப்பட்ட *30* குழந்தைகள் நால்வர் கோட்டம் என்ற மனையிலே தங்கியுள்ளார்கள். இக்கட்டடம் சைவ முன்னேற்றச் சங்கத்தாற் கட்டப்பட்டது. தற்பொழுது, வளர்ந்து வரும் தேவைகள் கருதி, மேலும் இந்த இடம் விருத்தி செய்யவேண்டியது அவசியமாகின்றது. அதற்கு பன்னிரண்டாயிரத்து ஐநூறு பவுண் **(£12,500)** தேவைப்படுகிறது. அன்பர்கள், ஆதரவாளர்கள் தங்களால் முடிந்த பொருளுதவி செய்தால் பிள்ளைகள் பயனடைவார்கள் என்பது உறுதி.

**நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர், நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்**

**தொடர்புகளுக்கு : பொருளாளர் - *0208 514 4732, 079 5636 9557***

# திருக்குறள் கற்போம்

## அருளுடைமை - Mercy

**அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்**
**பூரியார் கண்ணும் உள**

செல்வங்கள் பலவற்றுள்ளும் சிறந்த செல்வம் உயர்ந்தோரிடம் விளங்கும் அருட்செல்வமே! பொருட்செல்வம் இழிந்தோரிடத்தும் காணப்பெறும்.
The wealth of kindness possessed only by the good is wealth of wealth; the wealth of property is possessed even by the basest of men

**நல்லாற்றான் நாடி அருளாள்க பல்லாற்றால்**
**தேரினும் அ∴தே துணை**

நல்வழியாலே ஆராய்ந்து அருளுடையர் ஆகுக. பல வழிகளால் ஆராய்ந்து தெளிந்தாலும் அவ்வருளே துணையாம்.
Stand in the good path, consider and be kind; although you may perfectly study the rules of many different (sects), that (kindness) will be your best aid (in the acquisition of heavenly bliss).

**அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த**
**இன்னா உலகம் புகல்**

அருள் பொருந்திய மனமுடையார்க்கு அறியாமையுடைய துன்ப உலகிற் சேர்தல் இல்லை.
They will never enter the world of darkness and wretchedness whose minds are the abode of kindness.

**மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க் கில்லென்ப**
**தன்னுயிர் அஞ்சும் வினை**

நிலைபேறுடைய உயிர்களைக் காத்து அருள் செய்வானுக்கு தன்னுயிரை ஒரு பொருட்டாக மதித்து அஞ்சும் செயல்கள் இல்லை
(The wise) say that the evils, which his soul would dread, will never come upon the man who excercises kindness and protects the life (of other creatures)

**அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்**
**மல்லல்மா ஞாலம் கரி**

அருளுடையார்க்கு எப்பொழுதும் துன்பம் இல்லை. அதற்கு காற்றுவீசும் செழிப்பான பெரிய உலகமே சான்று.
This great rich earth over which the wind blows, is a witness that sorrow never comes upon the kindhearted.

**பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி**
**அல்லவை செய்தொழுகு வார்**

உயிர்களிடத்து அருளின்றிக் கொடுமை செய்தொழுகுவாரை அறம் செய்தலைத் தவிர்ந்து கடமையை மறந்தாரென்று நல்லோர் சொல்லுவர்.
(The wise) say that those, who neglect kindness and practise cruelties, neglected virtue (in their former birth) and forgot (the sorrow they must suffer)

**அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்**
**கிவ்வுலகம் இல்லாகி யாங்கு**

பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலக இன்பம் இல்லை ஆயினாற்போல, உயிர்கள் மேல் அருளில்லாதவர்களுக்கு அவ்வுலக இன்பம் இல்லை.
As this world is not for those who are without wealth, so, that world is not for those who are without kindness

**பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்**
**அற்றார்மற் றாதல் அரிது**

பொருட் செல்வம் அற்ற வறியவர் பின் ஒருகாலத்து செல்வத்தால் செழிப்பர். ஆனால் அருட்செல்வமற்ற கொடியவர் அழிந்தவரே; பின் ஒருகாலத்தும் ஆக்கம் பெறுவதில்லை.
Those who are without wealth may, at some future time, become properous; those who are destitute; for them there is no change (prosperity)

**தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்**
**அருளாதான் செய்யும் அறம்**

அருளில்லாதவன் செய்யும் அறச் செயல்களை ஆராயின் அஃது அறிவுத் தெளிவு இல்லாதவன் மெய்ப்பொருளை உணர்ந்தாற்போலும். (உணர முடியாது என்பது கருத்து)
If you consider the virtue of him who is without kindness it is like the perception of the True Being by him who is without wisdom.

**வலியார்முன் தன்னை நினைக்கத்தான் தன்னின்**
**மெலியார்மேற் செல்லும் இடத்து**

தன்னைவிட மெலியவரிடத்துத் தான் துன்புறுத்தச் செல்லும்போது வலிமை மிக்கவர் தன்னை துன்புறுத்த வரும்போது அவர் எதிரே தான் அஞ்சி நிற்கும் நிலையை எண்ணுக.
When a man is about to rush upon those who are weaker than himself, let him remember how he has stood(trembling) before those who are stronger than himself.

தமிழ்: முனைவர் இரா சாரங்கபாணி English: Rev Drew & John Lazarus

# Hinduism in search of answers...

(Continued from last issue)

## Why do we regard trees and plants as sacred?

The Lord, pervades all living beings, be they plants or animals. Hence, they are all regarded as sacred. Human life on earth depends on plants and trees. They give us the vital factors that make life possible on earth: food, oxygen, clothing, shelter, medicines etc.

This has now been picked up by scientists all over the world. They want us to save energy, save the environment and save the planet earth by saving trees, preventing waste, etc.

Hinduism teaches to regard trees and plants as sacred. Scriptures tell us to plant ten trees if, for any reason, we have to cut one. We are advised to use parts of trees and plants only as much as is needed for food, fuel, shelter etc. We are also urged to apologise to a plant or tree before cutting it to avoid incurring a specific sin named soona.


Certain trees and plants like tulasi, peepal etc., which have tremendous beneficial qualities, are worshipped even today. It is believed that divine beings manifest as trees and plants, and many people worship them to fulfill their desires or to please the Lord.



**Thulasi** is one of the holiest and most useful plants of Hindus. There are two types –Rama Thulasi- light green leaves generally bigger in size, and - Krishna Thulasi- with dark green leaves which is pre-requisite for Vishnu worship.

**Medicinal Use:**
In India Tulasi has been used in Ayurveda to treat many ailments since thousands of years. In this modern age, Tulsi extracts are used to treat simple ailments like common colds, headaches, stomach disorders and inflammation to more complex diseases like diabetes, blood pleasure and cholesterol. Because of its anti-bacterial properties, it is used in herbal cosmetics and to treat skin diseases.

The cure is possible using Tulasi because it contains hundreds of beneficial compounds known as phyto-chemicals. These phyto chemicals possess strong antioxidant, antibacterial, antiviral, adaptogenic, and immune-enhancing properties that promote general health and enhance the body's immunity against stress and diseases.



**Vilva** is a sacred tree symbol of Hinduism and considered embodiment of Lord Siva. Aegle marmelos is the botanical name of this sacred plant. Lord Shiva is fond of this tree and in the courtyard of every temple of Shiva, a Bilva tree will be planted. The leaves of the tree are trifoliate representing the three eyes of the Shiva. Pooja/ritual/prayers to Lord Shiva is incomplete without the offering of Bilvapathre/Bilva leaves.


**The medicinal properties of Vilva Tree:**
The fruit of bael (Vilva) tastes like marmalade and smells like a rose. In the summer, the trees have almost as many fruits as leaves. The tree also has the added advantage of requiring very little care.

The medicinal value of all parts of this tree finds mention in the ancient ayurvedic text Charak Samhita and even in the Vedic scriptures. The Charak Samhita describes all parts of the tree - stem, bark, root, leaves and fruits - to possess medicinal value at all stages of development.
The bark is used to make an antidote for snake venom. A decoction of leaves can do a great deal to heal ulcers. The Kurma Purana mentions that the regular drinking of the juice ensures a long life span and a golden skin!

In terms of its properties, the bael (Vilva) fruit is similar to banana, helping in two contrasting conditions - diarrhoea and constipation. As the fruit begins to ripen, it is helpful in treating diarrhoea. The fully ripe fruit is a very good laxative and acts as an excellent coolant for the body.

Medicinal Uses: The fresh ripe pulp of the higher quality cultivars, and the "sherbet" made from it, are taken for their mild laxative, tonic and digestive effects. A decoction of the unripe fruit, with fennel and ginger, is prescribed in cases of hemorrhoids. It has been surmised that the psoralen in the pulp increases tolerance of sunlight and aids in the maintaining of normal skin colour. It is employed in the treatment of leucoderma. Marmelosin derived from the pulp is given as a laxative and diuretic. In large doses, it lowers the rate of respiration, depresses heart action and causes sleepiness.

The bitter, pungent leaf juice, mixed with honey, is given to allay catarrh and fever. With black pepper added, it is taken to relieve jaundice and constipation accompanied by oedema.
(Information compiled from various medicinal sites.)




**Arugam Pul:**
Bermuda grass, Botanical name of this grass is Cynodon dactylon. We call it 'Arugham Pul' in Tamil, called 'Durva' in Sanskrit & 'Dhoob' in Hindi.

Medicinal Uses: 'Ayurveda', Traditional Indian Pharmacopoeia, states that this grass can be used in the treatment of Asthma, Bronchitis, piles, tumours, enlarged spleen and liver disorders! Another Great Traditional 'Unani system of Medicine' states, it is a tonic for brain and heart!

According to the folk's remedy...they crush this grass and apply it on their minor cuts! And it can be used for any general inflammation! Regular intake of this juice has several healing properties...like it reduces body heat, relieves impurities, lowers one's blood glucose level! From my Genetic point of view...it has lot more antioxidants, in fact! So...the antioxidants, prevents the free radical damage & reduces oxidation and thereby DNA degeneration (Less the DNA degeneration...the less we age, both physically and physiologically)!

Durbagrass stands foremost in puja ceremonies and in Yagna. It is used for each offering to Gods.



**Why do we consider the lotus as special?**

The lotus is the symbol of truth, auspiciousness and beauty (satyam, shivam, sundaram). The Lord is also of that nature and therefore, His various aspects are compared to a lotus (i.e. lotus-eyes, lotus feet, lotus hands, the lotus of the heart etc.).

The lotus blooms with the rising sun and closes at night. Similarly, our minds open up and expand with the light of knowledge. The lotus

grows even in slushy, muddy areas. It remains beautiful and untainted despite its surroundings, reminding us that we too can and should strive to remain pure and beautiful within, under all circumstances.

The lotus leaf never gets wet even though it is always in water. It symbolises the man of wisdom (Gnaani) who remains ever joyous, unaffected by the world of sorrow and change. This is revealed in a shloka from the Bhagwad Geeta:

Brahmanyaadhaaya karmaani
Sangam tyaktvaa karoti yaha
Lipyate na sa paapena
Padma patram ivaambhasaa

He who does actions, offering them to Brahman (the Supreme), abandoning attachment, is not tainted by sin, just as a lotus leaf remains unaffected by the water on it.

From this, we learn that what is natural to the man of wisdom becomes a discipline to be practised by all saadhakas or spiritual seekers and devotees.
Our bodies have certain energy centres described in the Yoga Shaastras as chakras. Each one is associated with a lotus that has a certain number of petals. For example, a lotus with a thousand petals represents the Sahasra chakra above the head, which opens when the yogi attains Godhood or Realisation.


Also, the lotus posture (padmaasana) is recommended when one sits for meditation. A lotus emerged from the navel of Lord Vishnu. Lord Brahma originated from it to create the world. Hence, the lotus symbolises the link between the creator and the supreme Cause.

Is there any animals/birds considered holy?


Gods are considered to have various animals as there 'vahanam' – vehicles.


Bull (Nandi) is the vahana of Siva and Parvati.
He Goat – Agni (Fire god)
The Antelope - Vayu (Wind god)
Buffalo – Yama – God of death
Swan – Sarasvathi – Goddess of knowledge
Garuda half man half eagle- Vishnu -God of sustenance
Makara – sea Monster – varuna Vedic god
Parrot – Kama (Love God)
Peacock – Kartikeya
Lion – Durga
Rat- Ganesha
Elephant- Indran
Dove – Brahma


A reader wanted to talk about the article published in the last Kalasam issue, rang the Editor and left a phone number to call back. Unfortunately, it was a 10digit number whereas the mobile numbers in UK are 11 digits. The Editor requests the caller to call again to discuss the issue. Thank you.



Thiruvalluvar had to hide the fact of having given asylum to a servant maid of Kalaimagal temple from the ascetic who came chasing her.
Master, you saved my chastity. But you who had not uttered lie now uttered a lie.
Falsehood takes the place of truth,
If it affords benefit free from blemish.
You are not servant maid of Kalaimagal temple. You are the image of Kalaimagal, the Goddess of Knowledge.
Master, will you kindly clarify my doubts and tell me how you addressed them in your literary work?
The ruler of Nanjilnadu, joining with the ruler of Podhiyil hills invaded Madurai. Uggiraperuvazhuthi requested Thiruvalluvar to come to his military camp.
Uggiraperuvazhuthi...I I'm Quite saddened to see you like this.
The tears of my leader on my bosom!
"If a hero can die with tears of his leader, Such death should be begged and got"
Long live divine Thirukkural!



Dhevar, I took precautions to protect the king's life but........
"What powers so great as of destiny? Even if one contrives some other thing, it is beforehand."


Mayilapur Chieftain repented to Tiruvalluvar regarding his mistakes after his return. Elelasingan expressed to him his grievance.
I am worried that I don't have a child in spite of possession of crores of wealth.
"Except as the Sparer spares in due degree, Even people with crores cannot enjoy."


Vasuki fell sick and became bedridden.
I want to ask you something. You ordained me to place a needle and a cup with water while serving food to you. I did as you said. But, you didn't use it even once. My ignorant mind wants to know the reason.
Many people starve for want of food. I ordained so to apprise the world that nobody should waste food. You never spilled even a single grain of rice. There was nothing to pick up with the needle.


Dhevar, last question, can woman attain heaven?
Had the woman been dutiful and devoted to her husband, She will attain heaven.


I was seeking a boon to breathe my last on the lap of my God. The sound of the divine Thirukkural is a great comfort to me at this moment. Oh my dear...
Oh, giver of good food, obedient ever to my word, Caressing my feet, last to sleep, first to rise, Oh, innocent one, have you gone? By night heceforth what sleep to my eyes?
But he has ordered me some days before itself to bury him in a simple manner. Should he be taken on green bamboos even without flowers? No, no, only in a golden chariot!
Eleasingan, bury me in a simple manner according to my wish.
Oh, God! What a power of penance! It is my folly for swerving from your word today.
"If the insatiable desire is driven away, The moveless blissful state is gained,"
A while after the loss of his wife, Thiruvalluvar peacefully passed away.
Oh father, father!
Our respect to you, the one who became one with Nature.
Oh, Light of the World, departed? Elelasingan, we should bury this uncrowned king of Tamilnadu in a grand manner.
Elelasingan built a temple in Mylapore. The site became a place of worship for people of Tamilnadu.
"Who on earth has lived domestic life as he should live will be placed among the Gods dwelling in heaven",
"A woman who worships her husband in the place of the Almighty




Courtsey: International Tamil Language Foundation

*Your Local Pharmacy Since 1984*

# Solanki Chemist

**Your Local Independent Pharmacy Catering for all your requirements!**

**Prescription Collection & Delivery**

**Confidential Advice in Private Consulting Room | Smoking Cessation**

**Medication Reviews | Travel Advice | Range of Yardley Products in Stock**

**Open**
**9.00 am - 8.00 pm Monday, Tuesday, Wednesday & Friday**
**9.00 am - 7.00 pm Thursday**
**9.00 am - 5.00 pm Saturday**

**Solanki Chemist, 324 High Street, North London E12 6SA**

**Tel : 020 8472 2901**



# WESTERN
## JEWELLERS

*Jewellers & Gem Merchants*

230,UPPER TOOTING ROAD
LONDON SW17 7EW
**PHONE : 020 8767 3445**

# SILK EMPORIUM

122 UPPER TOOTING ROAD LONDON SW17 7EN
**PHONE : 020 8672 1900**

# WESTERN
## JEWELLERS & TEXTILES

5, PLAZA PARADE, 29-33, EALING ROAD,
WEMBLEY, MIDDLESEX HA0 4YA.
**PHONE : 020 8903 0909**



**OPENNING HOURS**
**Monday to Saturday**
**10.00am - 6.30pm**
**Sunday 11.00am - 5.30pm**



இலண்டனில் வாசன் அச்சகத்தினரால் (தொலைபேசி : 020 8646 2885) வடிவமைத்து, அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 14-01-2010 அன்று வெளியிடப்படுகிறது.